உ

ஸ்ரீ முருகன் துணை.

மாற்ருந்தாய் கொடுமை என்னும்

# சபரிமலை, ஐயப்பசுவாமி

## திருவிளையாடல் நாடகம்



ஸ்ரீ விநாயகர் துதி. வெண்பா

மலையரையன் மகளான மாதேவி யீன்றெடுத்த
கலைநிறைந்த கணபதியேகைதொழுதேன்-நிலவுலகில்
ஐயப்பன் சரிதையதை அடியேன் நாடகம் பாட
செய்யப்பா நன்னருளே செய்.

ஸ்ரீ விநாயகர் துதி பாட்டு

கணநாதா குணபோதா அரைக்
கணமுமுனதடியை மறவேன் வருவாய் (கண)

தும்பை கொன்றையருகலரி மூளறி செழுங்
குவளை வில்வமுல்லை யாத்தி-இவைக்
குணர்ந்து முறையாயுரை சாற்றி
தொழுதேனேற்றி பழுதறபோற்றி
பணியணிபசுபதி பரமனருளைப் பெற்ற (கண)

பார்வதியாள் சிறு பாலா-அடியேன்
பக்திக்கிறங்காய் திரு மூலா
பாவானு கூலா மாமுகசீலா (கண)

அதிரச பாயாச மொடுவடையவல் பொறி
கடலையிட்டலி பல காரம்-நல்ல
அற்புதமோதக சாரம்
அளிப்பேனின் நேரம் களிப்பாய் தீரம் (கண)

கரும்புகதவிமா பலவிளைவு கற்
கண்டு சர்க்கரையும் படைப்பேன்-இன்னுங்
கனிந்த தேங்கனியு முடைப்பேன்
இருகழலடுப்பேன் வருதுயர் விடுப்பேன் (கண)

## சரஸ்வதி தோத்திரம்-பாட்டு

கலைமகளே வாணி கார்த்தருளே பொருளே
கஞ்சவடி தஞ்சமென்று
அஞ்சலிசெய் தஞ்சிநின்றேன் (கலை)
பாலனுக்காய் வந்து பாரினிலருள் தந்து
பாராயெனைக் காராய் வரந்
தாராய் துயர் தீராயின்று (கலை)
தாமதம் நீங்கியே சாந்தமுள்ளோங்கியே
தாயே வரு வாயே துணை
நீயே யிந்த நாயேன்றனை (கலை
சந்தத முன்னையே சார்ந்தேனேன் அன்னையே
ஜாலமாகு தோலமிடும்
பாலரனு கூலமாக (கலை

## பல தேவர்கள் துதிபாட்டு

கலையருள் தருங்கணபதி சரணம்
கருணாலயனே கந்தா சரணம்

மலைமகள் பாகா மஹேசா சரணம்
மங்கள குண மனோன் மணியே சரணம்

தலமோங்கிடுந் தமிழ்க்கரசியே சரணம்
தாமரை மலராசனனே சரணம்

ஜலங்கொண்ட கங்குல்மேனியோய் சரணம்
சுவாமி ஐயப்பா சரணம் சரணம்

தேவர்கள் துதி முற்றிற்று.

அடுத்தது கதையின் தொடர்பு ஆரம்பம்

## பொது வசனம்

அகோதெப்படியென்றால் ஸ்ரீ பரமேஸ்வரன் திருவருளினால் எந்நாடதிலும் பொன்னுடாக விளங்கிவரும் பந்தலநாட்டைப் பரிபாலித்து வரக்கூடிய குணசேகர மகாராஜன் கொலுநாடி வருகிற விதங் காண்க,

### குணசேகரன் வருகிற கவி

பூமனுந் திருமாலுந் தேடி காணா
பூரண கடவுளர் தம்பாதம் போற்றி

க்ஷேமமாய் பந்தல தேசத்தையாளுஞ்
சீர்கொண்ட குணசேகர மன்னனன்றானும்

நாமகளின் அருட் கொண்ட புலவர்சூழ
நன்மந்திரி நயந்திருபால் தாழ்ந்துநிற்க

நேமமதாய் அந்தணர்கள் வேதம்பாட
நேர்த்தியாய் கொலுநாடி வருகின்றேனே

## குணசேகரன் கவி

கோதிலா நீதிமந்திரி குடிமக்கள் மாசூலுக்கு
தீதுதருமிருகத்துன்பந் தீரவே வேட்டையாட
நீதிநன்வாக்கும் நல்ல விடை பெற்று செல்வதர்க்கு
மாது குணவதியாள் தன்னை மனைநாடியழைத்து வாரீர்

## குணவதி வருகிற-கவி

எங்கிலுங் கீர்த்தி பெற்ற எந்தனின் பிராணநாதர்
பொங்கமாயழைக்கக் கேட்டு பொற்சித்ரபதுமைப்போல
செங்கதிர் கிளம்பும் வண்ணச்சேலை பொன் மாலைப்பூண்டு
குங்குமதிலர்தமிட்டுக் குணவதி வருகின்றேனே.

## குணவதி வருகிற-தரு

மங்கைக் கரசியென்று மாணிலம் புகழ் பெற்ற
மாதுகுணவதி வந்தேன் மன்னன் சபைக்கு மாது
திங்கள் முகப்ரகாசி தேசமக்கள் விஸ்வாசி
திருமகளருள்பெற்ற திரவிய மகராசி

(சுருள்) தேடிய மன்னவர் யீடிலாபாதத்தை
நாடிதினம் புகழ் பாடித்துதித்திடும் (மங்)

கொஞ்சுங்கிளிமொழியாள் குமுதவிழியுடையாள்
குவலயமக்களன்பு கூறுமன்னநடையாள்

(சுருள்) கோதிலாதநன் மாதர்நீதியை
பூதலந்தனில் ஓதிவருபவள்
தரணியில் எளியாரைத் தாங்கி கை தூக்கு மாது
தானதருமம் ஜெப தபத்தில் நாள்போக்கும் சாது

[சுருள்] தப்புவழிகளை எப்போதும் நினையா
சற்குணவதியேனுங் கற்புக்கரசியாள் [மங்]

சத்தியம் அடக்கம் நல்ல சாந்தகுணப்ரதாபி
சாமியாங்கணவன் சொல்லைத் தட்டாமல் நடக்குரூபி

[சுருள்] சந்ததமுந்தெய்வ சிந்தையே பெரிதாய்
அந்தமாய் நினைந்து வந்தனஞ்செய்பவள் [மங்]

## குணவதி தரு வேறு

வந்தனம் பிராணபதி வண்ணமலர்கொண்டு
வஞ்சியாள் செய்தேன் துதி

செந்தாமரைப்போன்ற செம் பாதா
செல்வப் பாக்கியவரந் நாதா
எந்தன் மனக்கவலை நீங் காதா
என்னுயிருக்குயிராகிய நாதா

(வந்)

பிள்ளையில்லா பாவியானனே இந்த பாருலகாள பின்
வள்ளல் அடியாருக்கு வருத்தமென்ன செய்தேனோ
வழியில் முள்ளடைதேனோ வாத்தியாரை வைதேனோ
சுருள்) வஞ்சகத்தால் துயர் மிஞ்சிடயேழையை
அஞ்சாமலே பழி நெஞ்சார செய்தேனோ (மந்
தாய் தந்தை துயோகியானேனோ எனைப்பெற்று வளர்த்த தாய்
வாய் மதத்தாலுங்கொண்ட வஞ்சியின் போதனையாலும்
வளர்த்த மாதா பிதாவின் வயிறெரியச் செய்தேனோ
சுருள்) வல்லமையால் மிக நல்லவர் மேற்குறை
சொல்லிபுவிதனில் துள்ளித்திரிந்தேனோ (மந்

## குணசேகரன் கவி

மதிமிகு மந்திரிமாரே மானிலத் தேவர்களுக்கும்
விதிப்படி நன்மைதின்மை விளைவது அயனெழுத்தே
துதிமிகு தெய்வந்தன்னை தூஷிந்தால் கொடிய பாபம்
அதிவித கொலுவில் நாமும் அமருவோம் வருகுவீரே

## பொது வசனம்

அரசன் குணசேகரனும் மந்திரிமார்களும் கொலுவில் அமர்ந்திருக்க பந்தலநாட்டுக் குடிமக்கள் ராஜசபையைநாடி வருகிற விதங் காண்க.

## குடிமக்கள் பாட்டு

மகராஜா கோடி நமஸ்காரம்—ஏழை
மக்கள் துயர்தீர்ப்பா யிது நேரம்
மிகவாடி வந்தோ முபகாரம்—செய்து
மிடிமை அகற்றுவது உங்கள் பாரம் (மக
பாழுமிருகங்களால் மகாராஜா எங்கள்
பயிரெல்லாம் பாழாச்சே மகாராஜா
கூழுக்குங்கதியின்றி மகாராஜா
குந்தியழவைந்த துங்கோ மகாராஜா
விளைவுப்பொருள்களெல்லாம் பஞ்சமாச்சு-மக்கள்
வேதனையடைந்து மண்ணில் துஞ்சலாச்சு
களவும் பொய்யும் புரட்டும் மிஞ்சிபோச்சு-கூழுக்
கஞ்சிக்கு பிறரிடம் போய கெஞ்சலாச்சு (மக)

## குணசேகரன் தரு

குறைகூறிவந்து நின்ற குடிமக்களே-மிருக
கொடுமையையகற்றிவைத்து குடிமக்களே
வறுமையைத்தீர்த்து வைப்பேன் குடிமக்களே-சுகமாய்
வாழ்வீர் குற்ற நேருமல் குடிமக்களே
காட்டு மிருகந் தன்னை குடிமக்களே-உங்கள்
கண்ணில் புலப்படாமல் குடிமக்களே
வேட்டையாடி வொழித்து குடிமக்களே
வேதனையைத் தீர்த்து வைப்பேன் குடிமக்களே
பஞ்சந்தலையெடாமல் குடிமக்களே-நாட்டைப்
பாதுகாப்பதென்பொறுப்பு குடிமக்களே
அஞ்சவேண்டாம் சென்றுவாரீர் குடிமக்களே-நானே
அகவிலை குறையும் பாரீர் குடிமக்களே

## குணசேகரன் கவி

**கோதிலா நீதிமந்திரி குடிமக்கள் மாசூலுக்கு**
**தீதுதருமிருகத்துன்பந் தீரவே வேட்டையாட**
**நீதிநன்வாக்கும் நல்ல விடைபெற்று செல்வதற்க்கு**
**மாது குணவதியாள் தன்னை மனைநாடியழைத்து வாரீர்**

## குணவதி வருகிற-கவி

எங்கிலுங் கீர்த்தி பெற்ற எந்தனின் பிராணநாதர்
பொங்கமாயழைக்கக் கேட்டு பொற்சித்ரபதுமைப்போல
செங்கதிர் கிளம்பும் வண்ணச்சேலை பொன் மாலைப்பூண்டு
குங்குமதிலர்தமிட்டுக் குணவதி வருகின்றேனே.

## குணவதி வருகிற-தரு

மங்கைக் கரசியென்று மாணிலம் புகழ் பெற்ற
மாதுகுணவதி வந்தேன் மன்னன் சபைக்கு மாது
திங்கள் முகப்ரகாசி தேசமக்கள் விஸ்வாசி
திருமகளருள்பெற்ற திரவிய மகராசி

(சுருள்) தேடிய மன்னவர் யீடிலாபாதத்தை
நாடிதினம் புகழ் பாடித்துதித்திடும் (மங்)

கொஞ்சுங்கிளிமொழியாள் குமுதவிழியுடையாள்
குவலயமக்களன்பு கூறுமன்னநடையாள்

(சுருள்) கோதிலாதநன் மாதர்நீதியை
பூதலந்தனில் ஓதிவருபவள்
தரணியில் எளியாரைத் தாங்கி கை தூக்கு மாது
தானதருமம் ஜெப தபத்தில் நாள்போக்கும் சாது

[சுருள்] தப்புவழிகளை எப்போதும் நினையா
சற்குணவதியேனுங் கற்புக்கரசியாள் [மங்]

சத்தியம் அடக்கம் நல்ல சாந்தகுணப்ரதாபி
சாமியாங்கணவன் சொல்லைத் தட்டாமல் நடக்கும்ரூபி

[சுருள்] சிந்ததமுந்தெய்வ சிந்தையே பெரிதாய்
அந்தமாய் நினைந்து வந்தனஞ்செய்பவள் [மங்]

## குணவதி தரு வேறு

வந்தனம் பிராணபதி வண்ணமலர்கொண்டு
வஞ்சியாள் செய்தேன் துதி

செந்தாமரைப்போன்ற செம் பாதா
செல்வப் பாக்கியவரந் தாதா
எந்தன் மனக்கவலை நீங் காதா
என்னுயிருக்குயிராகிய நாதா (வந்)

குணசேகரன் தரு

சற்குணவதியாளே-வாழி நீடூழியாய்
சகமெனும் புவிமேலே
நற்குண மேலோங்கிய மானே
நாவுக்கினிதான செந் தேனே
தற்பரனருளால் சுகந் தானே
தழைத்தோங்கிடவாக்களித் தேனே [சற்

குணவதி-கந்தார்த்தம்

அருமையாய் புவியின் மீது அஷ்டபாக்கியங்களோடு
பெருமானின் அருளைப்பெற்று பிரியமாய்வ வாயென்று
திருவாக்கு தந்த நாதா தேவியாள் மகிட்சி யானேன்
கருணை வைத்தெனையழைத்த

தரு

காரணமென்னசொல்லுவீர்-என்பிராணநாதா- கார
தாரணியாளுமன்னு தையலா லாவதென்னு
[சுருள்] தட்டாமலெதும் அட்டியிலாமல்
பொட்டெனமுடிப்பேன் பட்டத்தரசியாள் [கார]

குணகரன் கந்தார்த்தம்

மடமயிலாளே நாட்டு மக்களின் குறையைப்போக்க
அடவியில் மிருகவேட்டை யாடவேசித்த மானேன்
படையுடனெனக்குங்காட்டில் பழுதுகள் நேருவண்ணம்
விடைதந்து அனுப்பவேண்டி

தரு

விரைவா யுந்தனையழைத்தேன்-வேறொன்றுமில்லை-விரை
துரைதனில் மக்கள்துயர் தடுத்தாளுமுறை நமக்கே
[சுருள்] தந்திடுவாய்விடை சுந்தரவதியே
வந்திடுவேன்மனை அந்தமாய்ததியே [விரை

குணவதி தரு

சென்றுவாருமன்னவரே வேட்டைகளாடசென்
இன்றே கானகஞ்சென்று இடர்செய்யும் மிருகங்களை
சுருள்) இன்பமாய்க்கென்று அன்புள்ள குடிகள்
நன்மை யடைந்திட கன்னிசொற்படியே (சென்

குணகரன் தரு

சந்தோஷமாகினேன் பெண்ணே உன்செஞ்சொல்மொழிபால் [சந்
அந்தமாய்க் கானகஞ்சென்று ஆங்குள்ளமிருகங்களை
சுருள்) அஞ்சாமற்சென்று கெஞ்சியமக்கள்
சஞ்சல தீர்ந்து வஞ்சியே வந்திட (சந்

குணகரன் தரு வேறு

மந்திரி மார்களே வாருங்கள் நமது
மட்டிலாசேனையைச் சேருங்கள்
குதிகொண்டு யெல்லாரும் கூட்டமாய் செல்லுவோம்
கொடிய மிருகங்களை கொல்லுவோம் வெல்லுவோம் [மந்தி

வில் வாள் கெதை யம்பு ஈட்டியும் பாலா
வளை தடிகள் தோளில் மாட்டியும்
வல்லாண் மைக்காரரே வந்திடுங்கள் முன்னே
வாதாடுமிருகமேல் போராடுங்கள் சொன்னேன் [மதி

குடிமக்கள் குறைகளைப் போக்குவோம் நல்ல
குதுகலவாழ்வையுண் டாக்குவோம்
அடவிதனில் வந்தோம் அஷ்டதிசையும் நாடி
அகப்படுமிருகத்தை வதை செய்யுங்கள் கூடி [மதி

## குணகரன் தரு வேறு

3வட்டையாட கானகத்தில் வாட்டமான புலிகரடி
ஓட்டமெடுப்பதை பாருங்கள் வேட்டைவீரரே
வாட்டி நமன்பதி சேருங்கள்

சிங்கந்தோடு செந்நாய் சிறுத்தை செம்புலி மான் யானைமண்ணில்
பங்கபட்டொழியக் கொன்றேனே சிலைவாளேந்தி
அங்கமழிந்திட வென்றேனே

பஞ்சமுண்டு பண்ணச்செய்த வஞ்சக மிருகங்களை
அஞ்சாமலடித்து வாட்டினேன் பதைபதைத்து
நெஞ்சந்துடித்திட ஓட்டினேன்

## குணகரன் கவி

அடவியில் வேட்டையாடும் அன்பு சேனைகளே கேளீர்
நடமாடித்திரியும் செந்நாய் நரி புலி வேங்கை தன்னை
இடம் விட்டு நகரு வண்ணம் எமன்பதி சேர்ப்பீரப்பா
வடதிசை சென்றுப்பார்த்து வருகுவேன் விரைவில் தானே

## குணசேகரன் தரு

வடதிசை நோக்கி நடந்தார் குணசேகரராஜன் வட
அடஞ்செய் மிருகாதிகள் அகப்படுமென்றுத்துள்ளி
அருமை மந்திரிசேனை பதிகளிடத்தில் சொல்லி (வட

## குணசேகரன் தரு

பழமுதிர் கதலிமாவும் பலாவெலுமிச்சை தெங்கு
நிழல்மிகு விருக்ஷம்குன்று நிறைந்தயிக்கானகத்தில்
மழலைச்சொல் மாறிடாத மதியிலாயிளங்குழந்தை
அழுகுரல் தனியாய்க் கேட்கும் அதிசயமறிகிலேனே

## பொது வசனம்

ஓர்சந்தன மரத்தடியில் அழகிய ஆண் குழந்தை அழுதுக் கொண்டிருப்பதை குணசேகரன் பார்வையிட்டுக் கண்டெடுத்த தனம் போல் அக்குழந்தையை மிகு ஆவலோடு தூக்கிக்கொண்டு தன் மனதில் ஆனந்த மேலிட்டுக் கூறும் விதம்

குணசேகரன் தரு

நான் செய்த பாக்கியமே பாக்கியம்-எந்த
நாட்டிலு பெற்றாருண்டோயிதுபோல் சிலாக்கியம்
மான் மழு சூலங்கொண்டே ஈசா உந்தன்
மகிமையால் புத்திரர்பேர் பெற்றேன் வேசா [நான்

ஈன்றெடுத்த தாய் தகப்பன் யாரோ-அவர்
இருக்குமிடம் யானறியேன் அவரெந்த ஊரோ
தோன்ற விட்டாய் கண்ணெதிரே ஐயா-இதற்கு
துணை நீயே துதிசெய்தேன் திரிசூழ கையா [நான்

குணசேகரன் கவி

நாட்டுக்குப் பணிபுரிந்து நல்லதைசெய்ய வந்த
மேட்டிமையுடைய மந்திரி மிகுசேனுபதியே கேளீர்
காட்டிலிக்குழந்தை தன்னைக்கண்டெடுத்த தெந்தன் பாக்யம்
வீட்டுக்கு நாமெல்லோரும் விரைவாகச் செல்வோம் வாரீர்

குணசேகரன் தரு

கண்ணே குணவதியே வாராய் வாராய்-காட்டில்
கண்டெடுத்த குழந்தையதை பாராய் பாராய்
மண்ணுள வந்தவண்டி மனக்குறையைத்தீர்த்தவண்டி

(சுருள்) மாதே நமக்கு ஏதடி குறை
ஓதுவாயடி பூதலம் புகழ் [கண்]

குணவதி தரு

ஆதவனைக்கண்டபனி போலே போலே—துன்பம்
அடைந்ததெல்லாம் போச்சு புவிமேலேமேலே
தாதா நம் பாக்கியமோ நகர் செய்த சிலாக்கியமோ

(சுருள்) நல்லசமையந் துள்ளிவந்தது
செல்வமணியை இல்லாள் பெற்றிட [ஆத]

குணகரன் தரு

சிவனருளால் கிடைத்த பாலன் பாலன்-இந்த
ஜெகத்தோர் வனங்க வந்த சீலன் சீலன்
அவமதித்திருக்காதே அன்புவைந்துக்கார்த்திடுவாய்

[சுருள்] அருமையுமிவன் பெருமையும் பின்னால்
நரணியறியுங் கருணகரியே [சிவ]

குணவதி தரு

கழுத்தில் ருத்ராக்ஷமொன்று நாதாநாதா-கயிற்றால்
கட்டியதையறுத்திடுவாய் தோதா தோதா
பழுத்தபொன்னுபரணம் பாலனுக்குப்போட்டடிலாம்

[சுருள்] பாரினில் பரி காசம் பண்ணுவார்
யாரோ யேழை யெனவேயெண்ணுவார் [கழு]

### குணகரன் தரு

கையாலறுத்தேன் பெண்ணே பாலன்
கழுத்தை விட்டுக் கயிர றவில்லையே-இது
ஐயனின் சோதனையோ இதனால்
ஆவதுயென்னமோ யானறியேன்

கத்திக்கொண்டு அறுத்தேன் கயிர்
கண்டத்தை விட்டறப்படவில்லையே இது
அத்தனின் சோதனையோ இதனால்
ஆவதுயென்னமோ யானறியேன்

### குணவதி கவி

மன்னவா மைந்தனோ டுமகிமைசேர் ருத்ராக்ஷமாலை
அன்னவனுதிக்கு முன்னே அவதரித்திருப்பதாலே
பின்னங்கள் படுத்தவேண்டாம பெரியதோர் புவனம் போற்ற
என்னபேரிடலாம் சொய்வீர் என்மன மகிழத்தானே

### குணாகரன் கவி

துணிவுடன் கயிற்றைவாளால் துண்டிக்க முயன்றபோது
அணிந்ததோர் ருத்ராக்ஷமாலை அறுபடாதிருப்பதாலே
பணிவுடன் சிவனை வேண்டி பண்புள்ள பாலனுக்கு
மணிகண்டனென்னும் பேரை மகிட்சியா யழைத்தேன் கண்ணே

### குணவதி தரு

பாலா பாலுண்ண நீ வாடா மணிகண்டனென்னும்
சீலா பாலுண்ண நீ வாடா
ஆலகாலமுண்ட சிவன் அருளினாலெங்களுக்கு
அருமை சுதனாய்த்தோன்றி பெருமைப்படுத்த வந்த பாலா

கோதையுள்ள மினிக்குதே ஊற்று ஜலம் போல்
கொங்கையில் பால சுரக்குதே
மாதாவாக வுனக்கு மண்ணில் பெண்ணாய் பிறந்து
மகாபாக்யசாலியானேன் மைந்தா மனமகிழ்ந்து பாலா

### பொது வசனம்

அகோதெப்படியென்றால் குணசேகரன் வனத்தில்கண்டெடுத்த குழந்தைக்கு மணிகண்டனென்னும் திருநாமஞ்சூட்டி அருமையாய் வளர்த்து வருகிறநாளில் சிலகாலம் சென்று சிவபிரான் நன்னருளால் குணவதி திருவுந்தியில் கருதரித்து பத்துமாதம் ஆனநாள் குணவதி பிரசவவேதனைப்படுகிற விதங்காண்க.

### குணவதி கந்தார்த்தம்

அருகினில் ஏவல் செய்யும் அன்புள்ள தாதிமாரே
திருவுந்தகனத்து பத்து திங்களு மானதாலே
பெருகுதே துன்பங்காணில் பிள்ளையோ பூதமே தான்
அருகியே மேனி வாடி

தரு

உள்ளந்துடிக்குதையையோ
துள்ளுதே பந்தைப்போலே
நானென்னசெல்வேன் உன்
நோகையாலடி வயிற்றில்
துள்பந்தரு வதுயிது
துடையோ ரண்டும் வலிப்பது
என்பால் சிவனுக்கென்ன
ஏதுமறிகிலேன்யான் செய்த
பூதமோ
வாதமோ
கோபமோ
பாபமோ

குணவதி தரு வேறு

ஐயையோ யெந்தன் ஆவியும்
போகுதே
அடிவயிர் துடைகள் ரண்டும்
நோகுதே
மெய்யது சோர்ந்து வேர்வையுண்
டாகுதே
மெல்லிநானென்ன செய்வேன்
குறை
சொல்லி சானெங்கு
உய்குவேன்

குணவதி தரு வேறு

பாலன் புறந்தானிதோ பாருங்கள் நாதா
பாருள்ளோர் போற்றும்
சீலன் பிறந்தானிதோ
பாருங்கள் தோதா
பானுமதிரண்டும்
நாணும் படியதாய்
வானுலக பஞ்ச
பாணன் வடிவதாய் (பாலா
காலன்றனை யுதைத்தவனை அருளாலே
கன்னிவயிற்றில்
கருவாய் உருவாகி பசும் பொன்போலே
நானின்றெடுத்த
சீலன்றனை போற்றிடுவார் புவிமேலே
ஆகையினாலே
(சுருள்) சித்தமகிழ்ந்து நான்
பெற்றமகனுக்கு
வைத்திடுவீர் பெயர்
கோற்றவரே நன்றாய் (பால

குணாகரன் கவி

தவபாலன் மணிகண்டன் கிடைக்கப்பெற்றாய்
தையரேயுன் வயிற்றில் பிறந்தோனுக்கு

சிவபாலனென்ற பெயர் பொருந்தவைத்தேன்
சிவன் போலிரு வரையுமொன்றாயெண்ணி

கவலைக்கிடமில்லாமல் கனிவதாகக்
காப்பதுந்தன் கடனாகும் சொன்னேன் பெண்ணே

புவன மதில் நாம் செய்தப் புண்ணியத்தால்
புத்திரபாக்கியத் தந்தான் பெருமானன்றே

குணவதி தரு

வள்ளலேயென் பிராணநாதா
பிள்ளைகளிருவருக்கும்
பள்ளியில் வைத்திடும்
வயதாகுதே பாடம்
படித்துமுன்னேறுங்
காலம்போகுமே
காகம் நல்ல வேளைப்பார்த்து
நூலதனை கற்கச்செய்வோக
பாலரை வரவழைப்பாய்
கண்மணி அவர்கள்
பாவனையைக் கண்டறிவோம்
பெண்மணி

V-R:D

## குணவதி கவி

அன்புள்ள தாதிமாரே அரண்மனை தனிலிருக்கும்
என் புத்திரருவர்தன்னை இக்ஷணம் சபைமுன்பாக
நன்மையாய் தாயுந்தந்தை தருவித்தாரென்று சொல்லி
நன்மையாயலங்கரித்து நலமதாயழைத்துவாரீர்

## மணிகண்டன் வருகிற கவி

தந்தை தாயழைத்தசேதி தனதாக அறிவோமென்று
விந்தைசேர் குல்லாபூண்டு வெண்பட்டு வுடையுடுத்தி
சந்தணப்பொட்டுமிட்டு சாந்து சவ்வாது பூசி
மந்திரிமார்கள் சூழ மணிகண்டன் வருகின்றேனே

## மணிகண்டன் வருகிற தரு

வந்தேன் மணிகண்டனென்னும் பாலன் நல்ல
வாஷிலுலாவிடும் பானுவைப்போலே
வாரேன் வையம் புகழும் சீலன்
அந்தணர் வேதம் பாட அருவைக்ஷாமரம் போட
அழகாய் விலைமாதர்கள் அசைந்து நடனமாட

சுருள்] அந்தர துந்தமி தொந்தோம் தோமென
விந்தைசேர் குணவதி மைந்தரிவரென [வந்

சரிகை பாகையுந் தகதகவென்ன நல்ல
சந்தணவாடை கமகம வென்ன
சாந்து சவ்வாது பொட்டு மின்ன
பரிவாய் பொன்னுபாரணம் பகலவன் போல் ஜொலிக்க
பாகத்தண்டை வெண்டையம் பளீர்பளீரென்றொலிக்க

சுருள்] பாருளோர் போற்றிடு மாரனேவென்ன
வீரர்களுந்துதி கோரியே பண்ண [வந்

அருமைத்தாய் தந்தையருமின்று என்னை
ஆவலாய் சபைக்கு அழைத்ததோர் சேதியை
அணுகித் தெரிந்திடுவோ மென்று
பெருமைக்களவிலாத மருவ மல்லிகைக்கொண்டு
பெற்றோர் மனங்களிக்கப் பேணித்துதிப்போமென்று
சுருள்) பேர்பெற்ற மந்திரி மார்களுஞ்சூழ
நேர்மையாய் பணிபுரி காலவலர் தாழ [வந்

மாசற்றவர் துதிக்கு நல்லோன் இந்த
மானிலமீதில் ஆணவக்காரரை
மடிக்குந்திறமையுற்ற வல்லோன்
தாசன் சிறுவன் ஸ்ரீனிவாசன் தமிழ்க் காதரன்
தஞ்சமென்று வருவோர் தமக்கு நல்லுபகாரன்

சுருள்] தாரணி போற்றிடும் வீரசொரூபன்
காரணப்பொருளாய்க் கோரும்பிரதாபன் [வந்

## மணிகண்டன் கவி

எந்தனின் தோழமாரே இக்ஷண மனைக்குச் சென்று
சிந்தைபோல் நடக்குந் தம்பி சிவகண்டன் தன்பால் நின்று
தந்தை தாயழைத்தாரென்று தன்மையாய் வார்த்தையாடி
அந்தமாய்க் கொலுமுன் பாக அழைத்தோடி வருகுவீரே

## சிவகண்டன் வருகிற கவி

அன்புள்ள தந்தைதாயார் அழைத்திடுஞ் சேதி கேட்டு
என் னுயிர்க்குயிருமான என்னருந் தமையனோடு
மன்னுதி மன்னர்சூழும் மாபெறுங் கொலுமுன்பாக
சின்னஞ்சிறு வயதிலங்குஞ் சிவகண்டன் வருகின்றேனே

## சிவகண்டன் வருகிற தரு

சுந்தரர்க்குத் தூது சென்ற சந்திரசேகரனைப் போற்றி
விந்தைசேர் பணிகள் துன்னவே சிவகண்ட பாலன்
வேடிக்கையாய் வந்து மேவினேன்

மத்தளத்தாளத்தோடெதிர் தித்திமி தகுடத்தோமென்று
நிர்த்தனமாதர்களடாவே சிவகண்ட பாலன்
நேர்த்தியாய்க் கொலுவில் வாரேனே

செங்கரும்பு வில்துடைய அங்கஜன் வடிவிலங்கு
மங்காதப் பொன்மாலையாடவே சிவகண்ட பாலன்
மகிஷியாக வந்து மேவினேன்

தந்தை தாயழைத்தாரென்று தமையன் வாக்காலறிந்து
மந்திரிமார்வந்து கூறவே சிவகண்டபாலன்
மதிமுகத்தோன் வந்து மேவினேன்

## சிவகண்டன் தரு

அண்ணாவுந்தன் பாதந்திற்கே போற்றி போற்றி-உந்தன்
அடியவன் துதிபுரிந்தேன் யேற்றி யேற்றி
மண்ணுலகம் போற்ற வந்த மாபெறுந்துணை வர்வுந்தன்
[சுருள்] மனதுமகிழ எனதுத்துதியை
தானதாகயேற்றுத் துணைபுரிகுவாய் அண்

## மணிகண்டன்-தரு

அன்பேயென்னுருயிரே தம்பி தம்பி-என்னை
ஆதரிக்குந் துணைவனென்றே நம்பி நம்பி
என்பாதம் பணிந்ததினால் என்றுமே நீடூழியாய்
[சுருள்] இலகிய செல்வம் மலைபோற்குவந்து
உலகில் வாழுவாய் நலமதாகவே அன்

## சிவகண்டன் தருவேறு

அருமையென் அண்ணா பெருமையாயென்னை
அழைத்தகாரணமென்ன அண்ணாவே-நான்
அறியநேரியச்சொல்வாய் அண்ணாவே

### மணிகண்டன் தரு

தந்தையுந்தாயும் அந்தமாய் நம்மை
தருவித்தசேதியொன்றுமறியேனே-அங்கு
தானேசென்றால் விபரம் புரிவோமே

### சிவகண்டன் தரு

நயவுள்ள அண்ணா தயங்குவதென்ன
தருணம் கொலுவைநாடிசெல்வோமே—நமதுத்
தாய்தந்தையைவணங்கிக்கொள்வோமே.

### மணிகண்டன் தரு

உற்றவரே எங்களைப் பெற்றவரேதினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றுமே நீர் செய்த உதவிக்கு நாங்களென்ன
மொழிவோம் உபசாரம்

### சிவகண்டன் தரு

பத்துமாதம் எங்களை வயிற்றிலேசுமந்து
பலதுயர் சகித்தீரே
எத்தபிராண சங்கடமுடனென்னை
நன்றுநீர் வகிந்தீரே

### மணிகண்டன் தரு

பெற்றீர் வளர்த்தீர் பேருமிட்டீர் ஜீவப்
பிரதிஷ்டைசெய்வித்தீரே
உற்றம்உதிரத்தை முலைப்பாலாகவே
ஊட்டியே உய்வித்தீரே

### சிவகண்டன் தரு

உடல்உயிர் சகலமும் நீர்தந்ததேயன்றி
உண்டோஇனி வேறு
அடரும் உலகெலாம் உமக்களித்தாலுமே
ஆகுமோ கைம் மாறு.

### குணாகரன் தருவேறு

அப்பா அருமைமக்களே-மணிகண்டா-சிவகண்டா-சிவன்
அருளினால்தரணியில்பெருமையாய்வாழ்குவீர்-அப்பா
இப்பாரிலெந்தனுக்கு இராமலட்சுமணரைப்போல்
(சுருள்) இன்பமாய்தோன்றிய பொன்மணிதீபமே
நன்மையாய் நாடெங்கும் நவிலும்பிரதாபமே (அப்)

### குணவதி தரு

மணியும்ஓசையைப்போலவேநீங்களொன்றாய்-மிகநன்றாய்-பெற்ற
மாதாபிதாமனம் மகிழவேச் செய்தீர்—மணி
பணிவாய்துதி புரிந்த பாலர்களேயெந்த நாளும்
சுருள்) பாருளவேந்தர்கள் கோரும்படியதாய்
பேருவிளங்கவே நேர்மையாய் வாழ்குவீர்—(மணி

## மணிகண்டன் தருவேறு

பாசமுள்ளதந்தைதாயே பாலரெங்களையழைத்த
தேது பிழை யாது
மாசற்றமனதாய்பெற்ற மக்களறியவே நன்ருய்
ஓது என்ன தீது

## குணகரன் தரு

இதுவொன்றுமில்லையப்பா ஓதுவேனழைத்தசேதி
பாலா குண சீலா
நீநிநூலறிய வேண்டித் தோதாகப்பள்ளிக்குச்செல்வீர்
லோலா மெத்த மேலாய்

## குணவதி தரு

தந்தைசொன்னவாக்கியத்தை மந்திரமாகப் பாவித்து
கண்ணே யெந்தன் கண்ணே
அந்தமாய்நீதிநூற்களை விந்தையாகக்கற்றுக்கொள்வாய்
சொன்னேன் புத்தி சொன்னேன்

## சிவகண்டன் தரு

புலிக்குப்பிறந்தகுட்டி பூனையாகப்போய்விடாது
தாயே யெந்தன் தாயே
கலைக்கற்றுக்கொள்வதெங்கள்கருத்தாகும்வருந்தாதே
நீயே அறி வாயே

## குணகரன் கவி

சுந்தர மந்திரிமாரே சுருக்கமாகபள்ளிக்கேகி
மந்திரிமறையுணர்ந்த மாவேந்தரக்குருக்களான
சந்திரசேகரையின்று சபைக்கு நானழைத்ததாக
வந்தனத்தோடுரைத்து வரவழைத்து வருகுவீரே

## குருநாதன்வருகிற கவி

அந்தமாய் நதி நீராடி அரியவெண்பூதி பூசி
மந்திரபூர்வாங்ககன்னி மணவாளன் பாதம்போற்றி
சுந்தரமுகந்துலங்க சுருதிநூல்கரத்திலேந்தி
சந்திரசேகரகுருக்கள் சபைநாடிவருகின்றேனே

## குருநதான்வருகிற தரு

சந்திரசேகரகுரு வந்தார்-மன்னன்சபைக்கு
சந்திரசேகரகுரு வாரார்
மந்திரஜெபமாலையும் மார்பினில்பூனூற் றுலங்க
மாசுபடாவெண்பூதி மடல்போல்மெய்யில் விலங்க
காதில்குண்டலமதுமின்ன-அரையிலணிந்த
நாபில்வஸ்திரமேமின்ன

(+)

ஆதிநூல்மறையோதி ஆண்டவன்றனைத் துதித்து
அரசன்குணசேகரன் அருமைச்சொல்லை மதித்து [சந்
சீருடன் பஞ்சாங் கமதைக்கொண்டு மூன்றுகாலமுஞ்
செப்புவேன் கணிது நூலைக்கண்டு

காரணப்பொருளே யெனைக் காருங்கங்காதரா வென்று
கரத்தில் கெண்டிகையேந்தி கடிதாய்வேகமா யின்று [சந்
உண்ணுமலைநகரில் வாசன் ஆல்போற்செழித்து
ஓங்கும் வன்னியகுல நேசன்

வண்ணத்தமிழ் ஸ்ரீனிவாசன் வகுத்த சங்கீதம்பாடி
வள்ளல்குணசேகரன் வாசஸ்த்தலம் தன்னைநாடி (சந்

## குருநாதன் கவி

விந்தையாயரசன் வாசல் விபரீதமாகக் காக்கும்
சுந்தரக் காவற்காரா திருக்காக மன்னவன்பாற்
அந்தணர் குலத்துதித்த ஆசிரியர் வந்ததாக
சந்தோஷமாகக் கூறி ஜல்தியாய் வருவாய்நீயே

## குணசேகரன் தரு

குருநாதா குணபோதா உம்மைக்
கோரி நமஸ்கரித்தேன் காரும் நன்மைகுள் (குரு
திருமகள் பாக்கியமும் தேவி பாரதியருள்
திகழுமேற்குல மறையோரே உந்தன்
தெரிசனம் பெற்றேன் கண்டுநேரே
திருவாக்குநீரே புரியுமாரே (குரு

## குணவதி தரு

இயல் இசை நாடகமெனுமுத்தமிழுங் கற்ற
எங்கள் குலகுரு நாதா உம்மை
ஏற்றித் துதித்தேன் மலர் இனிதாய் வேத (குரு
எழில் வரந்தாதா இனிதாய் வேத (குரு

## குருநாதன் தரு

மகராஜா மகாராணி இரு
மனமு மொருமனதாய் தினமும் வாழ்வீர் (மக
ஜெகநாதன் அருளினால் திகழும் பாக்யெத்துடன்
தேசம் புகழ வாழ்கு வீரே எந்தனி
திவாக்கு பலிக்கும் பார்ப் வீரே
திசை பத்தும் பேராய் தெரியும் பாராய் (மக

## குணசேகரன் தரு கொச்சி

அழைத்தக்காரணம் சொல்வேன் குருநாதா எங்கள்
அருமைந் புத்திரருக்கு குணபோதா
பழிப்புக்கிட மில்லாமல் பலகலைகளுநெங் கற்க
பாடஞ் சொல்லித் தருவீர் படித்ததன் வழி நிற்க (அழை

குணவதி தரு

உங்கள் பேரிருக்கட்டும் பெரியோரே உங்கள்
உதவியென்று மறவோம் மறையோரே
எங்கள் குழந்தைகள் மேல் எப்போதுந்தனி பாசம்
இருந்தால் பின்னுலடைவீர் இணையில்லா சந்தோஷம் (உங்

குருநாதன் தரு

அரசன் பிள்ளைகளென்று புரியாதே அம்மா
அவர்க்கேற்றப் பாடஞ் சொல்லத் தெரியாதா
சரசமாகவே நீதி சாரங்களைப் போதிப்பேன்
சந்தேகமானுல் பின்னும் சொல்லச்சொல்லி வாதிப்பேன் (அர

குணகரன் கவி

அரியயனுங் காணுத ஈசன் றன்னுல்
அடையப் பெற்றநவமணிகளிருவர் தம்மை
குருநாதா உம்மிடத்தில் ஒப்படைத்தேன்
குற்றமெதுங் குணபாக நீர் பாவித்து
தரணியாள் தத்துவமும் நீதி சாஸ்திரம்
தாழ்வில்லா இதிகாசமறை புராணம்
முறையாகப் போதிப்ப துவங்கள் பாரம்
முழுமனதாய் நமஸ்கரித்தேன் சென்று வாரீர்

குருநாதன் தரு

வாருங்கள் பாலர்களே பாடசாலைக்கு
வாருங்கள் சீலர்களே
நீராடி பணிபூண்டு நெற்றியில் வெண்ணீறணிந்து
நித்திய கர்த்தனுன நிமலன்றனை பணிந்து (வாரு
எழுது கோலும் பலகை இலக்கி நூலுங் கொண்டு
ஈன்றமாதா பிதாக்கள் இருவரையுங் கண்டு (வாரு
கோபக்குறியுங்கெட்ட குணங்களதை விடுத்து
குதுகலமாகவே குருதக்ஷிணை யெடுத்து (வாரு
தாசன் சிறுவன் ஸ்ரீனி வாசன் தமிழைப் பாடி
தமையனுந்தம்பியும் தனதாகவேக் கூடி (வாரு

குருநாதன் கவி

தரணியாள் மன்னன் செய்த தவத்தினுல் வந்துதித்த
அருமைபுத்திரரே கேளீர் அனைவரும் பள்ளிக்கு வந்தோம்
குரு உபதேசந்தன்னைக் கோணுமற் கொள்வீராகில்
வாருமப்பா பாடந்தன்னுல் வளரும்நல் லறிவுதானே

பொது வசனம்

குருவின் உபதேசப்படி பிள்ளைகள் பின்னுல் சொல்லவும்
குரு—ஹரி நமோத்து சிந்தம்

ஹரி, ஓம், நன்ருக குருவாழ்க, குருவே துணை

குருநாதன் தரு

அவென்று சொல்லுங்கள் - பாலர்களே
ஆவன்னவென்று சொல்லுங்கள்
இனாசயன்ன உன ஊவன்ன
எனவென்றி சொல்லுங்கள்—பாலர்களே
ஏயன்னவென்று சொல்லுங்கள்
ஐயன்னஒன ஓவன்ன ஔன்ன
ஃக்கேனவென்றுசொல்லுங்கள் - பாலர்களே
ஃக்கேனவென்றுசொல்லுங்கள்

குருநாதன் கவி

சொல்லியமொழிகள்யாவுந் தூற்றுமல்மனதுள் வைத்து
எல்லோரும்நாளைவந்து என்னிடம்பகலவேண்டும்
அல்லுசூழ்நேரமாச்சு ஆதவன்மறையலானன்
இல்லறஞ்சென்றுநாளை எல்லோரும்வருகுவீரே

மணிகண்டன் தரு

ஓடிவாடா தம்பி ஓடிவாடா
ஓடிவாடாயெந்தன்தம்பி உத்தமிநமதுத் தாயார்
தேடிவழிப்பார்த்திருப்பான் தெருவில் விளையாடாமல் (ஓடி

சிவகண்டன் தரு

வருவேனண்ண ஓடி வருவேனண்ண
வருவேனண்ண உன்பிறகே வையகம் புகழநம்மை
அருமையாக யீன்றெடுத்த அன்னைதந்தை தன்னைக்காண (வரு

குணவதி தரு

கண்மணிகளா அருமைக் கண்மணிகளா
கண்மணிகளா ளுங்களை நான் காணவெகு ஆவலாக
எண்ணிவழி பார்த்திருந்தேன் வண்ணமுது உண்ணவாரும் (கண்

பொது வசனம்

தாயாரிட்ட அமுதை பிள்ளைகள் இருவரும் புசித்தபின் குண சேகரன் தன் பிள்ளைகளைப்பார்த்து அவர்கள் கலாசாலையில்கற்றுக் கொண்ட பாடத்தின் அப்யாசங்களைக் கேட்கும் விதம்,

குணசேகரன் கவி

அற்புத காக்ஷியோங்கும் அரன் திருவருளால் வந்த
சொற்பெரும் பாலரேநீர் சொகுசாக பள்ளிக்கேகி
சற்குரு தன்னால்பெற்ற சகலநூல் விளக்கந்தன்னை
கொற்றவனென்னிடத்தில் குறையன்றி சொல்லுவீரே

குணசேகரன் வசனம்.

புத்திர சிகாமணிகளே! உங்களுக்கு சற்குருவால் போதிக்கப் பட்டுள்ள உயிரெழுத்து பதிமூன்றுக்கும் அடுக்கு மொழிகளில் அமைந்துள்ளபிரபலமுதாட்டிகள்யாரென்பதைசொல்லத்தெரியுமா

மணிகண்டன்:—சொல்லுகிறோம் தந்தையே!
குருகரன்:—எதோ சொல்லுங்கள் பார்க்கலாம்
மணிகண்டன்:—அ. அறத்தை யுணர்ந்தவர் தருமர்
சிவகண்டன்:—ஆ. ஆண்மையிற் சிறந்தவர் பரசுராமர்
மணிகண்டன்:—இ. இன்பத்தைத் துறந்தவர் பீஷ்மர்

சிவகண்டன்:—ஈ. ஈகையிற் சிறந்தவர் கர்ணன்
மணிகண்டன்:—உண்மையைப்பேசுபவர் ஹரிச்சந்திரன்
சிவகண்டன்:—ஊ. ஊக்கத்தில் மிகுந்தவர் துருவன்
மணிகண்டன்:—எ. எழில் உடையவன் அர்ச்சுனன்
சிவகண்டன்:—ஏ. ஏழ்மை உடையவர் குசேலர்

மணிகண்டன்:—ஐ. ஐயமிட்டு உண்பவன் சிறுதொண்டன்
சிவகண்டன்:—ஒ. ஒரே பத்தினிவிரதன் ஸ்ரீராமர்
மணிகண்டன்:—ஓ. ஓதி உணர்ந்தவர் வசிஷ்டர்
சிவகண்டன்:—ஔ. ஔவை நீதிநூற் பயின்றவள்
மணிகண்டன்:—ஃ உடலுக்கு ஆயுதம் போன்றது

## குருகரன் வசனம்

கண்மணிகளே! உங்கள்கல்வியின் திறமையைக் கண்டுமகிழ்ச்சியடைந்தேன் உலகத்தில் பல பொருளுக்கும் புகழுக்கும் அடிமைப்பட்டு வாழ்பவர்களை யெடுத்துக் கூறுங்கள்.

### மணிகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| பொருளில் | கடிமை | கள்ளர் | வேலும் |
| புகழிற் | கடிமை | புல்லர் | நல் |
| அருளிற் | கடிமை | ஆன்றோர் | தமிழ் |
| அமிழ்தற் | கடிமை | சான்றோர் | |

### சிவகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| கன்னிக் | கடிமை | கடையர் | அழி |
| காசிற் | கடிமை | மடையர் | தூய |
| அன்பிற் | கடிமை | தக்கார் | தமிழ் |
| அன்னைக் | கடிமை | மிக்கோர் | |

### மணிகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| செருக்கிற் | கடிமை | சிறியார் | புறச் |
| செமிப்பிற் | கடிமை | அறியார் | நல் |
| அறிவிற் | கடிமை | வல்லார் | தமிழ் |
| ஐயைக் | கடிமை | நல்லார் | |

### சிவகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| வயிற்றுக் | கடிமை | இழிஞர் | தீ |
| வளர்ச்சிக் | கடிமை | அழிவர் | எழில் |
| இயற்கைக் | கடிமை | புலவர் | தமிழ் |
| [illegible] | கடிமை | தமிழர் | |

## மணிகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| ...த் | கடிமை | ஆவோர் | நாளும் |
| ... | கடிமை | போவார் | தன் |
| ...ந் | கடிமை | தொண்டர் | தமிழ் |
| ...க் | கடிமை | நண்பர் | |

## சிவகண்டன் தரு

| | | | |
|---|---|---|---|
| ...யிற் | கடிமை | நேயர் | நெஞ்சின் |
| ...ப்பிற் | கடிமை | தீயர் | நல் |
| ...ழப்பிற் | கடிமை | உயர்வார் | தமிழ் |
| ...ர்ச்சிக் | கடிமை | அயரார் | |

## குறைவதி வசனம்

கண்மணிகாள்! நாங்கள் செய்த பாக்கியமே தேனினு ...ங்கள் தமிழ் மொழிகளைக்கேட்டு ஆனந்தமடைந்தோம் நீங்கள் ...ன்று பாலமுது நித்திரை செய்யுங்கள்.

## பொது வசனம்

இவ்விதமாக குறைவதிக்கு மணிகண்டன் சிவகண்டனென்று ...ரண்டு பிள்ளைகள் உதித்து வளர்ந்து வருகிறார்கள் என்பதைக் ...வளியூருக்குச் சென்றிருந்த கோகிலாவதி யெனுந் தாதிப்பெண் ...குறைவதியைக் காணும் படியாக அரண்மனைக்கு வருகிற விதங் ...ரண்க.

## கோகிலாவதி வருகிற கவி

சாகரஞ் சூழுமிந்த சுகத்தினில் பேர்படைத்த
பாருசேர் குறைவதிக்குப் பணிவிடை புரியுந்தாதி
மோகன் மாலையாட முழுமதி வதனந் துள்ள
கோகிலாவதியாள் ராஜ கொலுநாடி வருகின்றேனே

## கோகிலாவதி வருகிற தரு

...காஞ்சிறுங் கிளிமொழியாள் — குழுக்கிழியுளியாள்
...ஞ்சிமார் கோகிலாவதி — வண்ணமிரய் வந்தனள்
...ங்கள் குண தும்பாரி — மதிவதன சிங்காரி
கொங்கை முத்து கோர்வையாட — கோதையாள் வந்தனள்
மல்லிகை மிஸ்ஸி காமந்தி — மனோரஞ்சிதமுள்ள
...ல்லொரு மயங்கும் சித்ர — பாவையாள் வந்தனள்
...ந்தல் நாட்டுக்கரசி — பத்தினி குறைவதி தன்
...ந்த் போல் நடக்குந்தாதி — சிறாய் வந்தனள்
...ல்லுங் கனியாகும் படி — சொல்லாலே மதியுள்ள
...ல்லியினுக் கோகிலா — வதியிதோ வந்தனள்

## சோகிஷாவதி தரு

வந்தனந்தாயே தாதி — வந்தனந்தாயே
வந்தனந்தாயே உனது — செந்தாமரைப் பாதந்தனை

குணவதி தரு

வாழ்குவாயம்மா தாதி வாழ்குவாயம்மா
வாழ்குவாயிந்த புவிமேல் வஞ்சியே சஞ்சலமற்
தாழ்வுகள் நேறிடாமல் தனதானியமும் பெற்று [வா

மணிகண்டன் தரு வேறு

அம்மா நாங்கள் வீதியில் விளையாடி அம்மா விளையா
அடைக்கலமாக வாரோ முனைநாடி அம்மா உனைநாடி

குணவதி தரு

பாடசாலைக்கு நீங்கள் போகவில்லையா நீங்கள்போகவில்லையா
பாலர்களேயின்னு மணியாகவில்லையா மணியாக வில்லையா

சிவகண்டன் தரு

பாடசாலையின்றைக்கு விடுமுறையம்மா தாயே விடுமுறையம்மா
பத்தினியேவிடைதாரும்விளையாட சும்மாநாங்கள்விளையாடசும்மா

குணவதி தரு

அண்ணன்தம்பியிருவருமா யின்பமாய்க்கூடி அப்பா இன்பமாய்க்கூடி
அழகாய் விளையாடிவாரீர்அரண்மனைநாடி நீங்கள் அரண்மனைநாடி

மணிகண்டன் தரு

அருமைத் தம்பிவாடா தெருவில் விளையாட
பெரிதாய் பந்து போட பிடிக்க அடிக்கயென்றேட [அரு

சிவகண்டன் தரு

வருவேனி தோவேநாடி இருவருமாய்க்கூடி
தெருவில் விளையாடி பெருவோமின்பந்தேடி நாடி [வரு

பொது வசனம்

இவ்விதமாக மணிகண்டன் சிவகண்டனேடு மற்றும் பாடசாலை பிள்ளைகள் முருகையன் குருமூர்த்தி அருட்ஜோதி இவர்கள் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கதாதி கோகிலாவதிகுணவதியைப்பார்த்து கூறும் விதம்.

கோகிலாவதி: அம்மா! இராமரும் லங்சுமணரைப்போன்றுதெருவில் விளையாடச்சென்ருர்களே அதர்கள் இருவரும் தங்கள் பிள்ளைதானு
குணவதி: ஆம்! என் பிள்ளைகள் தான் இதிலென்ன சந்தேகம்
கோகிலாவதி; வெகுநாளாய் பிள்ளையில்லாமல் துயரப்பட்டீர்களே இப்போது கொஞ்சநாளில் இரண்டு குழந்தைகள் அவதரித்து இருக்குமா என்ற சந்தேகம் தாயே.
குணவதி: ஒருநாள் மன்னர்பிரான் காட்டுக்கு வேட்டையாட சென்ருர். அங்கு சந்தண மரத்தடியில் அழுது கொண்டிருந்த குழந்தையைக்கண்டு எடுத்துவந்தார் அன்றுமுதல் அவனைநேர்த்தியாக வளர்த்து வருகிறேம் அவன் பெயர்தான் மணிகண்டன்.
கோகிலாவதி: மற்றொரு குழந்தை?

குணவதி: அவள் என்வயிற்றிலுதித்தவன் அவன்பெயர்சிவகண்டன்
கோகிலாவதி: அம்மா! நீங்கள் மக்களைப்பெற்ற மகராசியாக வாழ வேண்டும். ஆனால் மணிகண்டனும் சிவகண்டனும் வயதுக்கு வந்தால் பட்டந் தரிப்பதுயாருக்கு?
குணவதி: என்னடி விசித்ரமான கேள்வி மூத்தவன் மணிகண்டனுக்குத்தான் பட்டம்.

கோகிலாவதி: ஹும் அனாதைப் பிள்ளைக்குப் பட்டம் உங்கள்வயிற்றுப்பிள்ளையை அவனுக்குத் தொண்டுபுரிய வைப்பது உங்கள் சட்டம் ஏன் அப்படித்தானே.

குணவதி: என்னடி வார்த்தையை மிஞ்சவிடுகிறாய்.

குணவதி தரு

அடக்கடி வாயை அடக்கடி
அடக்கடி மிஞ்சுதேசும்மா கிடக்குதென்றுப் பார்க்கப்போனால்
நடத்தனமாயென்னிடத்தில் படபடத்துப் பேசவந்தாய் (அட

கோகிலாவதி தரு

குற்றமா யென்மேற் குற்றமா
குற்றமற்ற மணிகண்டன் பற்றதை யறவொழித்து
பெற்ற மகனுக்கு தேச பட்டம்நான் தரசொன்னது [குற்

குணவதி தரு

குற்றந்தான் உன்மேற் குற்றந்தான்
கோற்றவரிந்த சேதியை சற்றேனுமறிந்தால் கீழே
அற்றுவிழு முன்சிரசு முற்றுமிங்கே பேசியது (குற்

கோகிலாவதி தரு

போகாதே மோசம் போகாதே
ஆகாதவளென்றுயென்னை அவதூறாகவே திட்டி
சாகாதே அனாதைக்கு நீ சாஸ்வதமாய்ப் பட்டங்கட்டி (போகா

கோகிலாவதி வசனம்

கேடுவருமுன்னே மதிகெட்டு வருமென்பதை உன்னாலறிந்தேன் பிறகு உன் இஷ்டம் ஐயோ! பாவம் கெட்டு போகிறாயே என்று வருவதைச் சொன்னேன் நீ கேட்க மாட்டேனென்றால் நான் என்ன செய்வது நீ என்னை என்ன திட்டினாலும் சரி! அடித்தாலும் சரி! உதைத்தாலும் சரி! உனக்கு தீங்குவரப் பார்ப்பேனோ! என்னமோ என்மேல் பழியில்லாமல் சொல்லிவிட்டேன்! அதுபோல் நடந்தாயானால் சுகப்படுகிறாய் இல்லையேல் கஷ்டந்தான் என்மீது மனஸ்தாபப்படவேண்டாம் உன் தாய்வீட்டு தாதியானபடியால் பின் வருவதைத் தெரிவித்தேன் உள்ளதை சொன்னவர் ஊருக்குப் பொல்லாதவர்! அடடா இந்த மதியுமிப்படி யிருக்குமா! ஆ தெய்வமே! என் அரசிஉன்மத்தம்பிடித்திருக்கிறானே இவனுக்கு நற்புத்திதரப்படாதா

## குணவதி தனி வசனம்

இதுகளெல்லாம் கவனிக்கில் துன்பமாகவே தோன்றுகிறது. இவளுக்கு வந்ததென்ன! நம் நலத்தை கருதிதானிவ் வளவாகமொழிகின்ருள் அவள்மீது கோபித்தது நம்மூட புத்தியே! (தாதியிடம்) அடி கோகிலாவதி! நீ சொன்னதை நினைக்க நினைக்க என்வயிறு பகீர் பகீரென்று கொதிக்கின்றதடி! இனி அந்த மணிகண்டன்.

## குணவதி தரு

விடுவேனு சும்மா விடுவேனு
விடுவேனு மணிகண்டனு முடிபுனைந்து ஆறுமுன்னே
படமுடியாத துன்பந் தந்து சடிதியில் மடித்திடாமல் (விடு)

## கோகிலாவதி தரு

வந்ததா புத்தி வந்ததா
வந்ததா நற்புத்தியிப்போ சொந்தமகன் தானிருக்க
பந்துவற்று நொந்துவந்த அந்தராசியை வெறுக்க (வந்)

குணவதி:—தாதி! இன்று பாடசாலை விடுமுறைநாள். உபாத்தியாயர் தனியாகத்தான் வீட்டிலிருப்பார். அவரிடஞ்சென்று சிவகண்டன்மேற் பக்ஷமிருக்கவும். மணிகண்டனை வெறுக்கவும் சில உபாயங்களை யெடுத்துக்கூறிவா! போ சீக்கிரம்.

கோகிலாவதி:—உத்தரவுதாயே! (தாதிபோகிருள்)
கோகிலாவதி:—குருநாதா! நமஸ்கரிக்கிறேன்.
குருநாதன்:—மங்களமுண்டாகுக. தாங்கள்யாரம்மா!
கோகிலாவதி:—நான் மகாராணிக்கு தாதி. என்பெயர்கோகிலாவதி.
குருநாதன்:—என்னை நாடிவந்தகாரணம்!

கோகிலாவதி:—சொல்லுகிறேன் மகாராணி புத்திரரிருவரில் மணிகண்டன் அனுதை வனத்தில்கண்டெடுத்து வளர்க்கப்பட்டவனுகையால் அவனுக்கு வித்யாப்பியாசங்களை அறவேக்கற்றுக் கொடுக்கலாகாதென்றும், தன்மகன் சிவகண்டனுக்கு பலநூற்களைக்கற்றுக் கொடுக்கும்படி சொல்லிவரச்சொன்னுள்மகாராணி.

குருநாதன்:—சரி! அப்படியேச் செய்கிறேன் சென்று வாருங்கள்
[மறுநாட்காலையில்]

## மணிகண்டன் கவி

அம்மணியெங்கள் தாயே அதிகாலையெழுந்திருந்து
செம்மையாய் ஸ்நானஞ்செய்துசிவன் பாதந்துதித்துவந்தோம்.
நம்பியும்நானுங்கூடி தவருமல்பள்ளிக்கே
உம்மிடம்நாடிவந்தோம் உத்தரவுதாரும்தாயே.

## குணவதி வசனம்

நல்லது சென்று வாருங்கள் பாலர்களே!
[கலாசாலையில் குருநாதன் அமர்ந்திருக்கிருர்]

மணிகண்டன்:—குருநாதா! நமஸ்கரிக்கிறோம்.
குருநாதன்:—தீர்க்காயுசு பெருக மணிகண்டா! [என்வார்த்தையை மறுப்பாயா?

மணிகண்டன்:—குருநாதா! தாயின் சொல்லை விட தந்தை சொல் மேலல்லவா

குருநாதன்:-அதற்குத்தான் கேட்டேன் பாடசாலையின் பின்னுள்ளபுளியமரத்தில் காய்கள் காய்த்திருக்கின்றன அவைகளையாவரும் பறிக்கவிடாமல் நீ போய் கார்க்க வேண் [டும்
மணிகண்டன்:—சித்தம் போற்செல்கிறேன் குருநா

(மணிகண்டன் போகிறான்)
குருநாதன்:-மாணுக்கர்களே! யான் சேட்கும் கேள்விகளுக்குத்தக்க வாறு விடையளிக்க வேண்டும் கவனமாகக்கேட்பீர்
குருநாதன்:-சிறுபெருமான் தன் நெற்றியில்திருநீறணிந்துக்காட்டியது ஏன்!

சிவகண்டன்:-மக்கள் அதிகாலையில் எழுந்து மலஜலங்கழித்து நதி நீராடி திருநீற்றைக்குழைத்து ஹர ஹர மஹாதேவாயென்று தன் மெய்யில் அணிவாராகில் அவர்செய்த பாவங்கள் துலையுமென காட்டினார்.
குருநாதன்:-சிவபெருமான் உமாதேவியை இடபாகத்தில் வைத்துக் காட்டியது ஏன்

முருகையன்:-மக்கள் தக்க பிராயத்தில்ஒருகன்னிகையைப்பார்த்து திருமணஞ் செய்து இருமனமும் ஒருமனதாய் இல்லற வாழ்க்கைச்செய்து நன்மக்களைப்பெற்று இன்பசுகம் அனுபவிக்கவேண்டி.

குருநாதன்:-சிவபெருமான் இடையில் காவி வஸ்திர மணிந்து ஜபமாலையோடு தண்டுகமண்டலம் கெண்டிகை யேந்தி தனி இடத்தில் இருகண்மூடி தபமிருந்துக் காட்டியது ஏன்

குருமூர்த்தி:- மக்கள் வயது முதிர்ந்த காலத்தில் தாமுன் செய்தபாவங்களை விலக்கிக்கொள்ள இன்பதுன்பங்களை வெறுத்து விகாவஸ்திரமணிந்து சிவநாமத்தைத் துதித்து தவமிருந்து கடவுளின் திருவருள்பெற்று இறப்பும் பிறப்புமில்லாத பரலோகமடைவதற்காகவே நீலகண்டன் நிருபித்தார்.

குருநாதன்:-மாதாபிதா செய்த நன்றியை மறந்தவர் யார்?
அருட்ஜோதி; கொடிய பாவியென்று அழைக்கப்படும்மகா துரோகி

(பாடசாலை நடந்து கொண்டிருக்கிறது)

குருநாதன் மகன் பிறவிக்குருடன்: ஹா! கடவுளே! உலகத்தில் மனித ஜென்மம் எடுப்பது அரிது அதனினும் கூன் குருடு செவிடு பேடு நீக்கிப் பிறப்பது அரிதுயென்பார்கள் என்னை பிறவிக்குருடனாகவே பிறக்க வைத்தாயே நானென்னசெய்வேன் என் பாவங்களை மன்னித்து கண்ணொளி தரப்படாதா கடவுளே.

## மணிகண்டன் விருத்தம்

அருமையென் குருதனக்கு அவதரித்திட்ட பாலன்
குருடனாய் மனையாற் குருடாகி குறையனுபவிக்கலானேன்
பெருமை பெரியோர் முத்தர் பேணிடுங் கைலைவாழும்
அருள்மணிகண்டனே நீ வர் கண்ணொளி தருகுவீரே

மணிகண்டன்: அப்பா! இதோ என்னைப்பார்!
குருடன்: ஐயா! கண் நன்றாகத் தெரிகிறது! தாங்கள்யார் தேவனு
ஊமை: ஐயா! பாதத்திற்கு கோடி கோடி நமஸ்காரமையா
நோயாளி: ஐயா! எனக்கு ஐயா வயிற்றுவலி ஐயா நான்
நோயாளி: ஐயா! நான் செவிடன் ஐயா! எனக்குப் பாண்டுரோகம்
மணிகண்டன்:- (விபூதியைத்தூவி) எல்லோருக்கும் நலம் தானு.
நோயாளிகள்: எல்லோரும் சுகமடைந்தோம் சுவாமி
மணிகண்டன்: அப்படியானுல் நீங்கள் யாவரும் சிவபெருமானைத்
தினம் பாடி பாடி மகிழுங்கள்

## நோயாளிகள் பாட்டு

கண்பார்வையும் காக்க வந்த — ஹரோகரா ஞானக்
கண் அருளும் வாழ்க — ஹரோகரா
பெண் ... முருகா — ஹரோகரா உம்மை
பேசா ... அருள்வீர் — ஹரோகரா

தீராத வயிற்றுவலி — ஹரோகரா குன்மந்
தீய பாண்டு ரோகம் சேராமல் — ஹரோகரா உந்தன்
பெருமை ... நீ வந்தாய் — ஹரோகரா சிவ
பெருமான் வாழ்கவாழ்க — ஹரோகரா

பாடசாலையை விட்டு வெளியே வந்து குருநாதனும் சிவகண்டனுமாக மணிகண்டனை கண்டு சேவித்தல.

## குருநாதன் கவி

பிணிகொண்டோர் துயரந்தீர்த்து பொருள்தந்தஞான
மணிகண்டாவுந்தன் கீர்த்தி மாநிலம் நிறைந்துவாழ்க
மணிகண்டனுந்தன் திவ்ய பாதமே பணிந்து நின்றேன்
என்னாலுஞ் செய்தகுற்றம் பாவையும பொறுப்பாய் போற்றி

## சிவகண்டன் கவி

மண்ணுலகந்தில் வாழும் மக்களைக் கார்க்கவந்த
அண்ணா உன்னருளால் மிகுந்த அதிசயங்கண்டேன் கண்டேன்
புண்ணியனைக்கை தாழ்ந்து போற்றிடு மடியேனெந்தன்
என்னாளும் குடியிருந்து எப்போதுங் கார்ப்பீர் போற்றி

## மணிகண்டன் கவி

குருநாதா வாழி தங்கள் குலமுங் கோத்திரமும் வாழி
அருமையென் தம்பியோடே அரண்மனை செல்லவேண்டும்
தருகுவீர் விடைமேலாக தவருமல் நாளை காலை
வருகிறேன் பள்ளிக்கையா வண்ணஞ்சேர் பாதம் போற்றி

குருநாதன்-சென்றுவருவீர்பாலர்களே! (எல்லோரும் போகிறார்கள் மணிகண்டன் தம்பி சிவகண்டா! மக்கள் வருந்திவந்த நோயையும் வறுமையையும் அண்ணன் தீர்த்து விட்டானென்று நமது தாய் தந்தையிடம் நீ சொல்லாமலிருக்க வேண்டும்.

சிவகண்டன் சொல்லவில்லை அண்ணா! (அரண்மனை)
குணவதி தாதி! இதோ மணிகண்டனும் சிவகண்டனும் வந்து விட்டார்கள் மணிகண்டனை ஒழிக்க என்ன ஏற்பாடு செய்யலாம்.
கோகிலாவதி இதோ விஷம் இதைபாலில் விட்டுக்கலந்து மணிகண்டனிடம் கொடு, தொல்லை நீங்கிப்போகும்.

குணவதி அப்படியேச் செய்கிறேன். குணவதி பாலில் விஷத்தை விட்டுக் கலக்கிறாள் சிவகண்டன் அதைப்பார்த்துக் கொண்டிருக்கிறான்.

குணவதி அப்பா மணிகண்டா! இதோபால் சாப்பிடு
மணிகண்டன்பாலைவாங்குகிறான்சிவகண்டன் அதைதட்டிவிடுகிறான்
குணவதி:—சிவகண்டா! ஏன் அண்ணன் கையிலிருந்தபாலை தட்டிவிட்டாய்.

சிவகண்டன் அம்மா! அந்தப்பாலில் ஈ ஒன்று மிதந்தது அதை சாப்பிடக்கூடாதென்று தட்டி விட்டேன் ஈக்குதலையில் விஷம்பாம்புக்கு பல்லில் விஷம். தேளுக்கு கொடுக்கில்விஷம் நம்மைபோன்ற மனிதருக்கு உடல்பூராவும்விஷம் என்பார்களே இதை தெரியாதா
சிவகண்டன்;—அண்ணா! வாருங்கள் சற்றுநேரம் படித்துவிட்டு போசனமருந்தியபின் நித்திரை செய்யலாம் (போகிறார்கள்)

(அன்றிரவு அந்தரங்க மண்டபத்தில்)

குணவதி:—தாதி! நான் பாலில் விஷத்தைக் கலந்ததை எப்படியோ சிவகண்டன் பார்த்துநான் அந்தபாலை தட்டிவிட்டானென்று நினைக்கிறேன்.

கோகிலாவதி:—அதுபோனால் போகட்டும் நீ இன்றைக்கு யோசனை செய் அதாவது உடம்புக்கு மாளாது யென்று அப்படியும் இப்படியும் கத்திக்கொண்டேயிரு அந்த மணிகண்டனை ஒழிக்கும் ஏற்பாடு நான் செய்கிறேன்.

குணவதி:—எப்படியோ உன்னால்நான் ஆகவேண்டும்

(மறுநாட்காலையில்)

குணவதி தரு

ஆறுமா குறைதீருமா என்றமெட்டு

கண்ணிகள்

வலிக்குதே தலையை வலிக்குதே
வலிக்குதே தலை குலுக்குதேநநரர்
சுலுக்குதேவுடல் நிலைக்கமுடியாமல் [வலி
நடுக்குதே வாந்தி யெடுக்குதே

வலிக்குதே இடுப்பை கடுக்குதேதுயர
கொடுக்குதே கீழே படுக்க முடியாமல் (நரு
சாவேனு வீணாய் போவேனு
சாவேனு யெக்கெதி யாவேனு பிள்ளைகள்
காவலனை விட்டு பூவைநானின்று (சாவே

குணவதி:- ஐயோ ஒன்றுந்தாங்க முடியவில்லையே என்ன செய்வேன்

குணகரன்: கண்ணே குணவதி! என்ன உடம்புக்கு

குணவதி: என் உடம்பைப் பற்றிய வியாதியை ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

குணகரன்: வைத்தியரைக் கொண்டு வந்து பார்த்தாயா

குணவதி: பார்த்தேன்

குணகரன்: அவர் என்ன சொன்னார்

## குணவதி தரு

வைத்தியரைக் கேட்டதற்கு வாய்வு யென்கிறார் சூதக
வாய்வு யென்கிறார் இது
வலுத்துப்போச்சு மருந்து கொடுக்க
முடியாதென்குறார் பிழைப்பது
கடுமையென்குறார்

குணகரன்: பிறகு? சோசியரைக் கொண்டு வந்து பார்த்தாயா!

## குணவதி தரு

சோசியரைக் கேட்டதற்கு தோஷமென்கிறார் சனியன்
தோஷமென்குறார் இது
சொஸ்தமாகுந் திருப்பாற்கடல்
ஜலத்தாலென்குறார் பாற்கடல்
ஜலத்தாலென்குறார்

## குணகரன் கவி

தெய்வமே யென்ன செய்வேன் தீராத வினையைத் தீர்க்க
துய்யபாற்கடல் ஜலந்தான் துரிதமாய் வேண்டுமென்றாய்
வையகத் தேவர்தான் சென்று வருகுவார் கடல் கடந்து
உய்யவேயெந்தன் நெஞ்சம் உருகுதே பாகுபோலே

## மணிகண்டன் தரு

அப்பாதிருப்பாற்கடல் ஜலமது அன்னைக்கவசியம் வேண்டுமென்றாய்
தப்பாமலே நான்கொண்டு வருகிறேன் தந்திடுவாய் விடைஎந்தனு
[க்கே

## குணசேகரன் தரு

கண்ணே மணிகண்டா வொருசிறு கால்வாயைத் தாண்டமுடியா
[தென்றால்
வண்ணகடலேழுங் கடந்து நீ வருவதென்றால் மகாசிரமமடா

## மணிகண்டன் தரு

அன்னை தந்தை ஆபத்துக்குதவாத அருமை சுதனுக்கு பெருமை
[யுண்டோ
ன்னர்மன்னா என்னை யனுப்புவாய் மயங்கிடாமல் மனத்தியங்காம

### குணசேகரன் தரு

பாலா விடை தந்தேனடா திருப் பாற்கடலைத்தாண்டி வருவதற்கே
சிவாசிவன் பேரைச் சொல்லி நீயும் சென்று வாராய் ஜலங்கொண்டு

### சிவகண்டன் தரு

அண்ணாவுனை விட்டுப்பிரிந்து நான்அகத்திலிருந்துசகிக்கமாட்டேன்
உன்னோடு நான் துணையாக வந்திட உறுதிகொண்டேன் மனப்
[பிரியமதாய்

### மணிகண்டன் தரு

தம்பிவுனை நம்பியல்லோபெற்ற தாய்தந்தைக்குதவியாய் விட்டு
[போரேன்
வம்புசெய்துவாராதடா யெனக்கு வழியில்பிழை ஒன்றும் நேருதடா

### சிவகண்டன் தரு

பெற்ற அன்னை தந்தைக்கு மேலான பிரிமுள்ள அண்ணாசரணஞ்
[செய்து
உற்றதம்பி விடையளிக்க உத்தமனே தெய்வபக்திமானே

### மணிகண்டன் தரு வேறு

அன்னை தந்தை விடையளிக்க அருமை தம்பி மனங்களிக்க
பன்னிருகை வேலன் போலவே மணிகண்ட பாலன்
பாற்கடலைத் தேடி நாடினான்

அருமையான பிறவிதன்னை துரும்பாகவே நினைத்து
கருங்கடலைத் தாண்டி செல்லவே மணிகண்ட பாலன்
கதிரவன் போல் வந்து மேவினேன்

கண்டு கருங்கடலை கடக்க பிரமித்து நின்று
அண்டர் நாயகனைப் போற்றினான் மணிகண்டபாலன்
அருள் பெற பாமாலை சாற்றினான்

### மணிகண்டன் துதி தரு

அண்டர்கள் போற்றும் அருட்பெருஞ்ஜோதி
ஆண்டவனாகிய பரமேசா
தொண்டே புரிந்தேன் துணைபுரிவாயே
தூண்டாமணியே சர்வேசா

திருமாலுமயனுத் தேடி காணாத
தேவதேவனே பரமேசா

வருவாய் உருவாய் சிறுவன்கேட்கும்
வரமே தருவாய் சர்வேசா

மாசிலாமணியே மலரில் மணமே
மாபெருந்தேவே பரமேசா
தாசனும் ஸ்ரீனி வாசனின் துதிக்கு
தந்தருள் புரிவாய் சர்வேசா

பொது வசனம்

அகோதெப்படியென்றால் மணிகண்டன் கடலைக்கடந்து செல் கடவுளின் கிருபை வேண்டுமென்று கரையில் நின்று பரம கடவுளை துதிக்க இதையறிந்த பரமேசன் பார்வதி சமேதரா கொலுவுக்கு வருகிறவிதங் காண்க.

பரமக் கடவுள் வருகிற கவி

அடிநடுவு முடிவாகி அமலமாகி
அகிலசராசரங்களையும் அமைத்து ஞான

வடிவுடைய பொருளாகி வான்பூவாகி
வளர்மதியும் ரவியாகி மன்னுயிர்க்குள்

குடியாகி குணமாகி குணத்திலுள்ளே
குறியாகிக் குறியதனுட் குலவாநின்று

படிமிசையில் பல்லுயிரைப் பாதுகாக்கும்
பரமேசன் கொலுநாடி வருகின்றேனே

பரமன் வருகிற தரு

பாருளோர் துதி பரமன் வந்தனரே பல்லுயிருக்கும்
பரகதிபெற வரமுந் தந்தனரே
கோருவோர்களின் குறையைத் தீர்ப்பவர்
குணமாயுணவுகள் கொடுத்துக் காற்பவர்
யாருஞ் சிவகதி யடைய சேர்ப்பவர்
அன்பர்கள் துதி யனைத்து மேற்பவர் (பாரு

மதனை நுதல்விழியாலே எரித்தவராம் தக்ஷபிரமனின்
மகளுக்கு மணமாலை தரித்தவராம்
நதியை சடையினிற் பதிய முடித்தவர்
நங்கையான் துர்க்கை நலிய நடித்தவர்
துதிபெருந்திரி சூலம் பிடித்தவர்
தொண்டர்க்கு அருள் தோன்றிக் கொடுத்தவர் (பாரு

ஏமனை யுதைத்தின்பங் களித்தவராம் மார்க்கண்டனுக்கு
என்றும் பதினாறுவய தளித்தவராம்
தீமைபுரி க்ஷமணனைக் கொடுத்தவர்
தேர்விஜயன் மேற்போர் தொகுத்தவர்
பாமரர் தொழு மருளைப் படைத்தவர்
பாஸ் பதாஸ்திரக்கணை கொடுத்தவர் (பாரு

உண்ணுமலைநகர் தன்னிலே வாசன் வன்னியருவேசன்
ஓங்கும் நற்புகழ் பூங்காவன தாசன்
புண்ணியகதை தனைக்கொண் டாடவும்
பூஜிக்குந் தொண்டர்கள் நாடவும்
வண்ணத்தமிழ் ஸ்ரீனிவாசன் பாடவும்
வறுமையும் பிணிபறந்து வோடவும் (பாரு

### பரமன் கவி

பூவுலத்தோர் கொண்டாடும் புனிதகுண்டோதரா கேள்
கோதிலா தொண்டர்க்காசீர் கொடுத்து ரசிக்கவேண்டி
ஆதியாம் பரமமூர்த்தி அழைத்திட்டாரம்மா வென்று
மாதுமாதேவி தன்னை மகிக்ஷியாய் யழைத்து வாராய்

### பொது வசனம்

இவ்விதமாக அடியார்களைக் கார்த்து ரக்ஷிக்கவேண்டிய பரமன் பார்வதியை அழைக்க பார்வதாதேவி சபையைநாடி வருகிற விதங் காண்க.

### பார்வதாதேவி வருகிற கவி

நவரத்தின கசிதரூபி நாதாந்த மாயை
சிவபெரு மானழைத்த சேதியை யறியவேண்டி
தவமுனி சித்தர் முத்தர் தாரணியோர்கள் போற்ற
பவமதை யகற்றி காக்கும் பார்வதி வருகின்றேனே

### பார்வதி வருகிற தரு

காமனை காய்ந்தோர் மங்கை வாமனரூபன் தங்கை
கன்னி பார்வதியாள் வந்தேன் சபையைநாடி கன்
பூமகள் கலைவாணி புழக்கு மேலானவள்
புவியில் பல்லுயிரையும் போஷக்குந் தாயானவள்
(சுருள்) பூரணி புனித நாரணி ஞானி
காரணி கெளரி வீரபவானி (காம
நீலகண்டருக்கன்று நெற்றிக்கண்ணை யளித்தேன்
நீங்காத யிடபாகம் பாங்காய் பெற்று களித்தேன்
(சுருள்) நீதியற்ற வரும் வாதியைக்கொன்றவள்
பூதலத்தி லருட் ஜோதியாய் நின்றவள் (காம
வீரனும் சண்டன் முண்டன் கோரசிம்பன் நிரும்பன்
தீரன் மகிடாசூரன் திடனும் வைசூரவம்பன்
(சுருள்) தீரமழியவே போரில் மடித்தவள்
கோரு மமரர்விசார முடித்தவள் (காம
ஜீவநாதனழைக்க ஜெகன்மாதாவோடி வந்தேன்
ஸ்ரீனிவாசன் துதிக்கு சிந்திக்க அருள் தந்தேன்
(சுருள்) சென்னை வாழும் பால சுந்தரம் போற்றிட
அன்புள்ள மக்கள் அனைவருமேற்றிட (காம

### பார்வதி கொச்சகம்

சுத்தரர்தனக்காக தூதுசென்று பாவையர்க்கு
அந்தமாய் மனமுடித்த அற்புதனே தற்பரனே
கொந்தளி வில்வங் கொன்றை மலர்சொரிந்து
செந்தாமரை யடியை சேவித்தே னுண்டருளே

### பரமன் கொச்சகம்

வேலாயுத ஜெனனி வேதாந்த நாயகியே
நாலா மறைமுடிமேல் நடித்து வரும் பொற்சிலையே
ஆலால முண்டோன் அருளிய்ந்தே னெப்போதும்
மேலாக வாழ்ந்திருப்பாய் விமலேஸ் வரியாளே

பார்வதி தரு

ஆத்திமலரணிந்த அரனே கங்கா தரனே
அடியாளென்னை யழைத்த தேதுயேது-ஞான
வடிவேயுற்ற சேதியை ஓது ஓது

பரமன் தரு

ஓதுவேனடியாருக்கு உகந்தோர் வரமளிக்க
உத்தமியுனையழைத்தேன் நானே நானே எந்தன்
சித்தம் போலமர்ந்திருப்பாய் மானே மானே

பார்வதி தரு

மீனுந்திரி சூல மழு வாயுதங்கரத்தில் கொண்ட
மன்னுவொரு புதிய சேதி சேதி-அதை
உன்னால் தெரியவந்தேன் நீதி நீதி

பரமன் தரு

நீதியான பதிலென்ருள் ஓதுவேனதன் விபரம்
நினைத்து வந்தது யென்ன சொல்லு சொல்லு-எந்தன்
சினத்துக்காளாகவேண்டாம் நில்லு நில்லு

பார்வதி தரு

நில்லுமென்ற சிவனுரே நெற்றியில் வெண்ணீரணிந்து
நீடுலகில் காட்டிய தென்ன யென்ன-அதனால்
கூடும் பலனைச் சொல்வீர் முன்னே முன்னே

பரமன் தரு

முன் வினை பவமகல அன்பாய்த்திருநீரணிந்து
முத்தர் சித்தரறியக் காட்டி காட்டி-நல்ல
பக்தியைவளரச் செய்தேன் நாட்டிவ் நாட்டில்

பார்வதி தரு வேறு

நாடு நகரத்தோர் முன்னில்—இந்த
நாரியை யிடபாகந் தன்னில்
கூடும்படி வைத்தக் கூத்தா நின் கருத்தென்னு
கோதையாளறிந்திடக் கூறுவாய் மன்னு

பரமன் தரு

மன்னுனுமனைவியுங் கூடி- இந்த
மாநிலத்தில் புகழ் தேடி
நன்மக்களைப் பெற்று நல்லறம் புரியவே
நான் பாகம் வைத்தது நாடெங்கு மறியவே

பார்வதி தரு

வண்ணக்காவியோகத் தண்டு ஜெப
மாலைகெண்டி கையிற் கொண்டு
புண்ணியரே இருள் புகுவனத்திற்சென்று
கண்மூடித் தவஞ்செய்தக் காரணமோ இன்று

## பார்வதி வசனம்

மஹாதேவா! மண்ணின் மீது வசித்து வருமாந்தர்களில் யாரொருவர் அதிகாலையெழுந்து நதியில் ஸ்நானஞ்செய்து விபூதியைக் குழைந்து ஹரஹரா ஓம் மஹாதேவாயென்று ஜெபித்து நெற்றி முதல் அங்கம் வரை அணிவாராகில் முன் பின் செய்தக் கன்மவினைகள் பாபம் சாபம் இவையெல்லாம் வெண்பூதி பொடி உதிருமாப் போலே யுதிர்ந்து புனிதனாகுவாரென்று, முதலில் நானே நெற்றியில் திருநீறணிந்து மக்களுக்குக் காண்பித்தேனென்றீர் அது அவசியமானது தான்!

அதன்பிறகு ஆடவர்கள் நற்குலப் பெண்ணைப் பார்த்து இருமணஞ் செய்து ஒற்றுமையோடிருந்து அறம் புரிந்து நன்மக்களைப் பெற்று எங்களைப்போல் சதிபதியாக இல்வாழ்க்கைச் செய்யுங்களென்று என்னை தங்கள் இடபாகத்தில் வைத்து உலகமறியக்காட்டினேனென்றீர் இதுவும் நன்று.

பிறகு மூன்றாவதாக தாங்கள் தாடி சடாமுடியுடன் காவிவத்திமணிந்து தண்டு கமண்டலத்தோடு ஜெபமாலைப் பிடித்து தபம்செய்துக் காட்டிய கருத்தென்ன கூறாய்!

### பரமன்-கவி

இறைவியே உரைப்பேன் கேளாய் இல்வாழ்க்கை செய்வா
அறுபது வயது தோன்றில் அவனிமூவாசை யற்றுத் [ரெல்லாம்
துறவியாய் பரமன் றன்னைத் தொழுதுநற் றவமிருந்தால்
பெறுவது முத்தியென்றே பொம்மானுங் குறித்தவாறே

### பார்வதி-கவி

மகிமையை யறிந்துக் கொண்டேன் மன்னுயென் பிழைபொறுப்பீர்
தகைமைசேர் பத்தர் முத்தர் தவமுனி மற்றுளோரும்
வகையோடு சமைசேவிக்க வந்திடும் நேரமாச்சு
திகம்பரநாதர் நாமும் இருச்சபையிலமருவோமே

### மணிகண்டன் தரு

இன்னுந்தயவு வல்லையா ஈசா அடியேன்
எடுத்த பிறவியின் தொல்லையா
அன்னம் ஆகாரமின்றி ஆழிகளா மீது நின்று
உன்னைக்கூவி வருந்துகிறேன் உள்ளமெலாம் வாடியின்று (இன்
என்னைக் காப்ப துனக்கு பாரமா உனக்குமெனக்கும்
இருப்பது அனேக தூரமா
மன்னுமறை மீதிலாடும் பரனே கங்காதரனே
உன்னைவிட வேறுதெய்வ முண்டோ சொல்வாய் அரனே (இன்
மாசற்ற ஜோதி நாதனே இம்மண்ணுலக
மக்கள் பூஜிக்கும் பாதனே
தாசன் ஸ்ரீநிவாசன் வண்ணத் தமிழ் விளங்கச் செய்தவனே
பாசம் வைத்து உனையழைத்தேன்பாரெங்கும் நிறைந்தவனே (இன்

### பரமன்-தரு

அழைக்குறான் கூவி அழைக்குறான்
அழைக்குறான் நமது பாலன் ஆதரிக்க வேண்டுமேவி
ஆதலால் விடையெனக்கு அளிப்பாயெனது தேவி (அழை

### பார்வதி-தரு

ஆரையா அழைப்ப தாரையா
ஆரையா கங்காமூர்த்தி அழகுவேலுடைய பாலன்
தாரணியில் பேர்விளங்க தானிருக்க அந்த சீலன் (ஆரை

### பரமன்-தரு

சொல்லுவேன் கேளாய் சொல்லுவேன்
சொல்லுவேனவன் சரிதை வல்லமையோ டெந்தனக்கு
பிள்ளையாயுதித்த சேதி பிரியமாக உந்தனக்கு (சொல்

### பரமன்-வசனம்

கேளும் பெண்ணே பார்வதா! அசுரர் வம்சத்திலுதித்த பஸ்மாசூரனெனபவன் என்னைக்குறித் அரிதாகியதபம்செய்தான் அத்தபத்திற்கிணங்கி அவன் பாற்சென்று உனக்கு யாதுவரம் வேண்டுமென்றுகேட்டேன். அவன் என்னை நமஸ்கரித்து என் வலது கரத்தை யார் சிரசின்மீது வைத்தாலும் பற்றியெரித்துப் போகும்படியான வரத்தைக் கொடுங்கள் சுவாமியென்றான் அவ்வாறே தந்தேனென்றேன். கொடுத்த வரத்தை உன்னையேபரிசோதிக்கவேண்டுமென்று என் சிரசின் மீது அந்தஸ்த்தை வைக்க முயன்ற காலத்தில் நான் ஐவேலங்காட்டிலோடி மறைந்தேன்: இதையறிந்த மகாவிஷ்ணு ஜெகன்மோகினி வடிவங்கொண்டு அவர்தந்திரத்தால்பஸ்மாசூரனை தானே யெரியும்படியாகச் செய்தபின் அம்மோகினி ரூபத்தோடே யென்னை அழைத்தார். நான் வெளியேவந்து மோகினி ரூபத்தைக் கண்டு காதலுற்ற காலத்தில் விந்தானது வெளியாயிற்று. வெளியான விந்தானது பூமியிற் பட்டால் உலகமே பஸ்மீகரமாகப் போய் விடுமேயென்று மகாவிஷ்ணு தன் அருகரத்தாலுந் தாங்கிக் கொண்டார். தாங்கிய விந்தானது விஷ்ணுவின் கையில் ஒரு குழந்தையாக உருவானது அக்குழந்தை கையில் உதித்தமையால் கையனாரப்பன் என்றும் ஐயனாரென்றும் அரிக்கும் அரனுக்கும் உதித்தமையாக ஹரிஹரப் புத்திரனென்றும் திருநாமஞ்சூட்டி புத்தாங்கமென்னும் வனத்தில் திருமாலின் அருளினால் வளர்க்கப்பட்ட ஐயனாருக்கு சில காலஞ் சென்று வேள்விநாதமுனியருடைய புதல்விகளான பொற்கலை பூரணியைத் திருமணம் செய்து வைத்தக் காலத்தில் ஐயனாரிடம் வேள்விநாதர் சொல்லி அனுப்பியது யாதென்றால் நீ திருமணம் செய்துக்கொண்ட இருமாதர்கள் மீது எப்போதும் பக்ஷமாகவே இருக்கவேண்டும் இல்லையேல் உனக்கு கொடிய சாபம் நேரிடுமென்றார். அவ்வாறே செய்கிறேனென்று வேள்வி நாதரிடம் உத்தரவுப் பெற்றுக்கொண்டு பொற்கலை பூரணி சமேதரனாய் ஐயனார்புத்தாங்க வனத்தில் வாழ்ந்து வரும் நாளில் சிலகாலஞ்சென்று பொற்கலைக்கு ஒரு ஆண்குழந்தை உண்டாயிற்று அந்நாளிலிருந்து ஐயனார்பொற்கலைமீது விருப்பமாகவும் பூரணி மீது வெறுப்பாகவிருந்து வந்தார்.

பூரணியானவள் தன்தந்தையாகிய வேள்விநாத முனியிடஞ்சென்று நடந்ததைச் சொல்ல முனிவருக்கு கோபம் பிரவேசித்து எப்போது என் சொல்லைத்தட்டி நடந்தமையால் அவன் வடிவங்குன்றி எடுக்கப்போகும் பிறவியிற் சந்ததியற்று பிரமச்சாரியாக போகக் கடவதென்று சாபத்தைக் கொடுத்தார் அச்சாபமானது ஐயனுருக்கு பலித்து தன் மேனியானது அழிந்து ஒருவனத்தில் சந்தன மரத்தடியில் ஒரு குழந்தை வடிவம் பெற்றுக்கிடந்தான் அவ்வனத்தில் வேட்டையாட வந்த பந்தலநாட்டுக்கு அரசனாகிய குணசேகரன் அக்குழந்தையை எடுத்துக்கொண்டு போய் மணிகண்டனென்றும் பேரை வகித்து வளர்த்துவருகிறான். அந்த மணிகண்டனானவன் யாதோவொரு காரணத்தைக் கொண்டு தன்னைத் துதித்து அழைக்கின்றான். அவனுக்கு வேண்டிய உபகாரத்தை செய்து வருகிறேன் விடை கொடுதேவி.

பார்வதி:—நாதா! அந்த பாலனை நேரிற்காண நானும் வருகிறேன்
பரமன்:—நல்லது, அப்படி செல்லுவோம்.

பரமன்-தரு

ஆலகால விஷமுண்டோன் வாளையுங் காளை மீதேறி
பாலன் மணிகண்டன் காணவே தொண்டர் கொண்டாட
பரமனிதோ வந்து தோன்றினார்

பாவையர்க்கு தூதுசென்ற அரவாபரணமூர்த்தி
அரியும் பிரம்மாதி போற்றவே காளைமீதேறி
ஆழிகரை வந்து தோன்றினார்

மணிகண்டன்-தரு வேறு

ஆண்டவா சரணம் அரவப் பணியாய்
பூண்டவா சரணம்
பாண்டவரி வழகன் பார்த்திபனறனக்காக
பத்தினியோடு வந்து பரஸ்பதாஸ்திரந்தந்த (ஆண்

பரமன்-தரு

பாலனே வாழி பாதம்பணிந்த
சீலனே வாழி
பாலா அமுர்தகுண சீலா ஜெகம்புகழ்
மேலான வரந்தந்தேன் ஆலமுண்டோனருளால் (பால

மணிகண்டன் தரு வேறு

அன்னையே எந்தன் அன்னையே
அன்னையே சின்னஞ்சிறுவன் உன்னித மலரைக் கொண்டு
என்னையாள வந்த பசும் பொன்னடியைப் போற்றி செய்தேன் (அ

பார்வதி-தரு

கண்மணி யெந்தன் கண்மணி
கண்மணியே உன்னைப்போற்றி மண்ணுலகிலுள்ளளோர் துதி
பண்ணும்படியாக தாயார் வண்ணமாயாசீர் வதித்தேன் (கண்

## பரமன் கந்தார்த்தம்

எடுபடா கேகை வாள் வில்லும் எரிமலை வாயுதங்களேந்தி
இடமிடும்பாலா சேனைந் திரளாற்றுத் தனிமையாக
அடவி கல் மலை கானூடு அந்நாளே விரைந்தானடி
கடற்கரை மீது நின்று

### தரு

கருதித் துதித்த தென்னமோ
உறுதி மொழி நானென்னமோ — என்னிடக்கேட்கும்
பரிதி வடிவிலங்கும்
— கஷ்டங்கள் தீர்ப்பேன்
சுருள்) பக்ஷமாய் சொல்லும் — கஷ்டங்கள் தீர்ப்பேன்
துஷ்டரை வென்று — இஷ்டம்போல் காப்பேன் (கரு

## மணிகண்டன் கந்தார்த்தம்

மாற்கண்டனுயிரைக்கொள்ள மற்கடமீது வந்த
கூற்றனையுதைந்த பாதா கூறுவேனொருந்தானின்னை
ஆற்றொணாத்துயரைத் தீர்க்க ஆக்கை ஆவியைவெறுத்து

### தரு

பாலனுன் வந்தேனையனே — கருங்கடலைப்
பார்த்து பயந்தேன் மெய்யனே
வேலனை படைத்த மீசா — வெள்ளிமாமலை வாசா
சுருள்) வேண்டினேனுந்தனை — ஆண்டவனே கடல்
தாண்டிநான் வந்திட — வேண்டியதருளுவீர் [பால

## பரமன் வசனம்

ஆனால் கேளும் மணிகண்டனே கடல்கடைந்த காலத்தில் உண்டாகிய வெண்புரவி ஒன்றுண்டு அதை இதோ தந்திருக்கிறேன். நீ நினைத்த இடங்களைக் குறித்து இக்குதிரையின் மீதுயேறிச் சென்றால் உனக்கு வேண்டிய பொருளை வெற்றி பெறலாம்; சென்று வருவாய் கண்மணி!

மணிகண்டன்:—தங்கள்சித்தம்என்பாக்கியம் போய்வருகிறேன்பிதா

## மணிகண்டன் தரு (சிந்து)

இதுநல்ல சமயமென்று — மணிகண்டன்
ஈசனருள் பெற்றெழுந்து — பாசமதாய்
பறந்திடும் வெண்புரவி — மீதிலேறி
பாற்கடலெங்கேயென்று பறந்து — வாரேன்

## பொது வசனம்

இவ்விதமாக புரவியின் மீது மணிகண்டன் பாற்கடலை நோக்கி வருகும்போது அந்த பாற்கடற்கரையில் வாசமாகிய காமிகாவதி ராக்ஷசி வரும் விதங் காண்க.

## காமிகாவதி வருகிற கவி

பூமியிலழகு வாய்ந்த புருடரைக் கலந்துகூடி
க்ஷேமமாய் வாழ்வோமென்று சிந்தித்து அலங்கரித்து
தீமையே குடியாய்க் கொண்டுத் திரியுந் தாடகையோவென்ன
காமிகா வதியானென்னுங் காரிழை வருகின்றேனே

## காமிகாவதி வருகிற தரு

மிகாவதி மாது வந்தனனே மதுக்கேற்ற
வன்யாறேன தேடி நொந்தேனே
சோமசுந்தர வடி விலங்கிட
சொகுசானமணி பணி துலங்கிட
பூமியுள்ளவர் மனங் கலங்கிட
பூரித்துஇரு ஸ்தனங் குலுங்கிட (காமி
லகையாய்க் கடலேழுந் திரிபவளாம் அகப்பரும் பேரை
வுகானங்கள் செய்து வருபவளாம்
இலகுங் கட்கெதை வாளுந் துன்னவே
இருவிழி பொறி யெறிந்து மின்னவே
உலகுலவுணர்கள் தலைவி யென்னவே
உருவம் பெருமலை யென்று பன்னவே' (காமி
ண்டர்களெனைக் சண்டு நடுங்கிடவே வாரானேயென்று
வனியோர் பயங்கொண்டு வொடுங்கிடவே
கொண்டதோர் மையலாவே வாடியே
குமர வடிவழகனைத் தேடியே
வண்டுபோல சங்கீதம் பாடியே
வந்தவன் கடற் கரையை நாடியே (காமி

## காமிகாவதி கவி

பரபரப்பாக யின்று பாலாழிக்கரையை நாடி
அருவையாள் வருகும்போது ஆதவன் உதயம்போலே
உருவான நரனைக்கண்டேன் உல்லாசமாகச் சேர்ந்து
பெறுகுவேன் காமயின்பம் பேதையாளின்று தானே
(தூரத்தில்நின்று மணிகண்டன் அழகைக்கண்டு வர்ணித்தல்)

## காமிகாவதி கவி

சத்தி திரிபுரி விமலி கௌமாரி என்ற மெட்டு

### பல்லவி

மதனசுந்தர மபன் இவர்யாரோ இவரெந்த ஊரோ
திழ்ந்தழைப்பது தானென்ன பேரோ என்னைச்சேர்வாரோ [மத

### அநுபல்லவி தொடர்

அதனமாயெனக் காசை மீறுதே
அல்குல் பசபச வென்று ஊறுதே
வதன கொங்கைகள் வாடி சோறுதே
வஞ்சியாள் மன மினரைக் கோறுதே (மத

பேதைமனந் துடியாய்த் துடிக்குது
பிடித்து சேரவே பிரியங் கொடுக்குது
குளிர்ந்த தென்றலோ குதிகொண் டடிக்குது (

காமிகாவதி!—இவர் அருகிற்சென்று விகாரிப்போம்

காமிகாவதி தரு வேறு

பாத நமஸ்கார மையனே மனது வைத்து
பாவை யென்னையாளுந் துய்யனே
ஆதாரமென்றுனது அடைக்கலமே புகுந்தேன்

(சுருள்) அரிதானவரம் புரிகுவீரது
பெருமையுனக்கு தருமடியவள் (ப

மணிகண்டன் தரு

மங்கையுந்தனன் புக்காகவே ஆசீர்வதித்தேன்
மானிலத்தி லினிதாய் வாழ்கவே
செங்கரமிரண்டுங்கூப்பி சேவித்த முகைக்கிரங்கி

சுருள்) சித்தங்களிவுற்று மெத்த மேலான்நற்
புத்தியுண்டாகவே சுத்த வாக்களித்தேன் (ம

காமிககவதி தரு வேறு

எந்தலர் தனிமையாக எங்கிருந்து யிங்கு வந்தீர்
எடுத்து உதைப்பீர்சொந்த பேரு பேரு நீங்கள்
இருந்து வசிப்பதெந்த ஊரு ஊரு

மணிகண்டன் தரு

மங்கையே பந்தலநாடு மணிகண்டனெந்தன் பேரு
மனமகிழ்ந்து உரைத்தேன் நானே நானே என்னை
மதித்துக்கேட்டதால் சொன்னேன் தானே தானே

காமிகாவதி தரு

கன்னியெந்தன் காதல் தீரக் கட்டியொரு முத்தம் தாராய்
காமனை வெல்லுங் கலவிக்காரா காரா நல்ல
மட்டழகிலே சிறத்த மாரா மாரா

மணிகண்டன் தரு

காமவிகாரம் பிடித்த சோம சந்தராங்கி யென்னை
கருதவேண்டாமே யெட்டி நில்லு நில்லு எனக்கு
கடுங்கோபம் வருமுன்னே சொல்லு சொல்லு

காமிகாவதி தரு

கோபமுள்ளோரிடத்திலே லாபமுண்டெனத் தெரியும்
கொக்கோக லீலைப்படி மன்னு மன்னு நீயுங்
கொஞ்சியென்னோடு சேர்ந்தால் என்ன என்ன

## பொது வசனம்

மணிகண்டன் தன் ஞானத்தால் உணர்ந்து ராக்ஷசி வடிவமான ழிகாவதியின் மேனியை தன் கையால் தடவுகிருன் ராக்ஷசி உரு றைந்து முன்னிருந்த மறையவர் குலப்பெண்ணு கசுயரூபம்பெறு ளுள். சுயரூபமான பிராமணப்பெண் மணிகண்டனைப் பார்த்து.

பிராமனப்பெண்:—ஐயா! தங்களால் புனிதவதியானேன், தங்கள் னிப்பெருங் கருணை நீடுழி வாழ்க.

மணிகண்டன்:—பெண்ணே! இந்த ராக்ஷச உருவானது உனக்கு எப்படி உண்டானது?

பிராமணப்பெண்:—ஐயா! நான் சப்தகன்னிகளில் ஒருத்தி ஓர்நாள் பிரமன் மீது மோகங்கொண்டு என்னைச்சேரும் படி மன்ருடினேன் அவர் என்மீதுக்கோபித்து நீ காமிகாவதிஎன்ற பெயருடன் ராக்ஷசி உருவமடைந்து சாகரத்தீவில் அலைந்து உன் மனதுக்கேற்ற புருஷ ரைக்கூடி இன்ப சுகத்தை அடைவாயென்று சாபத்தைக் கொடுத் தார். நான் அவரை வணங்கி சுவாமி! இச்சாபம் எப்போது நிவர்த்தி யாகுமெனக் கேட்டேன் ஒருகாலத்தில் புண்ணிய புருஷன் அங்கு வருவான் அவனுல் உன் சாபம் நிவர்த்தியாகுமென்ருர் அவா அது இந்நாளில் பலித்தது சுவாமி!

மணிகண்டன்:-பெண்ணே! இனிமேலாகிலும் நன்மதியைக்கொண்டு துன்மதியை விடுத்து பரமனைத்துதித்து நற்கதியடைவாய்.

பிராமணப்பெண்:—பாக்கியவதியானேன் வருகிறேன் சுவாமி!

(பிராமணப்பெண் கைலாயம் போகிருள்)

### மணிகண்டன் தரு

கெண்டியில் பாற்கடல் கொண்டு — மணி
கண்டன் புரவி மீது வாரேன் திசை — கண்டு

அண்டப்பிரா னனுகூலத்தாலே — ஏழு
அலைகடலைத்தாண்டிவாரேன் புவியின் — மேலும்

பானுலவுந் வானகவெளி மீது — குதிரைப்
பறந்தோடி வருகுதே அரிதாயிப் — போது

தேனெழுகுந் தமிழ்க் கீதம் பாடி — நாட்டின்
திசைகண்டு வருகிறேன் மணிகண்ட — னேடு

(மணிகண்டன் தான்சென்ற காரியத்தை முடித்துக்கொண்டு நாட்டிற்கு வருகிருன் குணவதி தன் தாதியிடம் கூறும் வஞ்சக மொழியைக் காண்க.

### குணவதி கவி

தாரணிமதிக்குந்தாதி தையலென் மொழிக்கிசைந்து
வாருதிக் கடக்கச்சென்ற வல்லவன் மணிகண்டன்ருன்
மாரணமானுல் நன்று வந்திடிலென்ன செய்வேன்
வேருெரு உபாயந்தன்னை விளக்குமா யுரை செல்வாயே

## கோகிலாவதி தரு

வருவதேது அம்மா வருவதேது அங்கே
மாளாமல் மணிகண்டன்றான் வருவதேது

சுருள்) வாருதி மீன்கள் தாறுமாறாகக்
கூறுகூறாக்கிக் கொன்றுயிருக்குமே (

## குணவதி தரு

என்ன செய்வேன் வந்தா லென்ன செய்வேன் அவ
எமன் பதிக்கனுப்ப என்ன உய்வேன்
சுருள்) எழிலுறுந்நாதி பழிக்கு அஞ்சால்
ஒழித்து நான்கட்ட வழிசொல்வாயடி (எ

## கோகிலாவதி கவி

வலிய பாற்ஜலங் கொணர்ந்து மணிகண்டன் தருவானாகில்
நலமிதிலந்த நீரைத்தடவும் பாவனையைக்காட்டி
மெலியவே முன்புறுத்தி வேதனைப்படுத்தும் நோய்கள்
புலிப்பாலால் தீருமென்றல் போயதற்கிரையாவானே

குணவதி:—ஆம் நாதி! இது நல்ல யோசனைதான் அப்படியே செய்கிறேன்.

கோகிலாவதி:—அம்மா! அதோ மணிகண்டன் வருகிறான்

சிவகண்டன்:—அண்ணா! வந்து விட்டீர்களா!

மணிகண்டன்:—ஆம்! தம்பி! ஆசீர்வாதம் [தாயைப்பார்த்து] அம்மா உடல்நிலையெப்படி யிருக்கிறது. இதோ இந்த பாற்கடல் நீரை தேகம் பூராவும் தடவுங்கள் (என்று கொடுக்கிறான்)

குணவதி :— கண்ணே! இதையெப்படித்தான் கொண்டு வந்தாயோ உன்பாவத்தி நான் ஆளாகுகிறேன். (என்று படுக்கையிலிருந்தே தடவுகிறாள் தடவிய சற்று நேரத்திற்குள்)

## குணவதி கவி

(அப்பா மாண்டாயோ என்ற மெட்டு)

என்ன செய்குவே ஏகுதே உயிர்
மன்னர் மன்னவா மாளவும் போரேனே
ஐயையோ அப்பப்பா
அம்மம்மா என் தாதி (என்
தலைநோயுடல் வலியைப் போக்கும்
புலிபாலானால் கிடைக்குமோடி
ஐயையோ அப்பப்பா
அம்மம்மா என்தாதி (என்

குணவதி:—ஐயோ! இந்த பாற்கடல் நீரை மேலேபூசியதிலிருந்து காடுபற்றி எரிவதைப்போலே என் உடல் பற்றி யெரிகிறதே ஐயோ.

கோகிலம்:—ஏம்மா! நேற்று ஒருவைத்தியர் வந்தாரே, அவர் என்ன சொன்னர்.

குணவதி:—அவர் என் கைநாடியைப் பார்த்து நாட்டு மருந்தால் உன் வியாதி குணமாகாது காட்டில் வாழும் புலிப்பால் கொண்டு வந்து இதை உள்ளுக்கு சாப்பிட்டால் தீராத நோய்களெல்லாம் தீர்ந்து விடுமென்றார் அதை யார்க்கொண்டு வரப்போகிறார்.
கோகிலம்:—என்னம்மா! இளவரசர் மனது வைத்தால் எதையும் சாதிக்க முடியும்.

மணிகண்டன்:—தாயே! தாங்கள் கவலைப்படாதீர் புலிபால் எங்கே இருந்தாலும் நான் கொண்டு வருகிறேன்.
சிவகண்டன்:—அண்ணா! இப்போதாகிலும் உன்னோடு யானும் வருகிறேன்!

மணிகண்டன்:—தம்பி நீவரவேண்டாம் அம்மாவைப்பார்த்துக்கொள்
சிவகண்டன்:—பிறகு தங்களிடஷ்ம் சென்று வாருங்கள்

மணிகண்டன் ஆனந்தகளிப்பு

ஓம் சிவபரம் பொருளே எனக்
குற்றத்துணையாய் வந்து ஆண்டருளே
பாம்பணிந்திடும் பரமனே போகும்
பாதைகளில் தீதுறாமல் காரு மரனே (ஓம்

இருளான கானகத்தில் எந்தன்
இறைவனே வருகிறேன் கருணை வைத்து
அருளீய்ந்து ஆதரிப்பார் ஒரு
ஆபத்து மணுகிடாமல் பொறுப்பாய் ஓம்

புலி வாழுங்குகை எதுவோ ஒன்றும்
புலப்படவில்லை அதோ காணுத்துவோ
வலியவே சென்று பார்க்குறேன் இருந்தால்
வாகுற்ற அன்னை துயர் தன்னை தீர்க்குறேன் (ஓம்
மணிகண்டன்:—ஆஹா! நல்ல சமயத்தில் வந்தேன்

மணிகண்டன் தரு

புலிக்குட்டி விளை யாடுது அதைப்
பிடிக்க ஒரு சிங்க மோடுது
பலிக்குமா அதன் ஜெபம் பறந்தோட செய்குறேன்
பாங்காகவே வண்ணக் கணையதை யெய்குறேன் புலி

மணிகண்டன்:—அப்பா! சிங்கம் ஓடிப்போயிற்று புலிகுட்டிகள் பிழைத்தன அருகிற் சென்று பார்ப்பேரம்.
புலிக்குட்டிகள்; ஐயா! நல்லவேளையில் வந்து எங்கள் உயிரைக் காப்பாற்றுனீர் இல்லையேல் நாங்கள் சிங்கத்தின் வாய்க்கு இரையாகி இருப்போம் எங்களுக்கார்ந்த நன்றிக்காக நாங்கள் உமக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறோம் ஐயா! தாங்கள் யார்! எதற்காக இங்கு வந்தீர்.

மணிகண்டன்—புலிக்குட்டிகளே! உங்கள் தாயின் பால் கொஞ்சம் வேண்டும் அதற்காக இங்கு வந்தேன் கிடைக்குமா?

புலிக்குட்டிகள்:—தாராளமாய்க் கிடைக்கும் எங்கள் தாய் வரும் நேரம் தாங்கள் கொஞ்சம் மறைவாக யிருங்கள்.

(மணிகண்டன் மறைந்து கொள்கிறான் தாய்ப்புலி வருகிறது)

புலி:—குழந்தைகளே! வாருங்கள் பாற்குடித்து பசியாறுங்கள்.

குட்டிகள்:—தாயே! உங்கள் பால் எங்களுக்குத் தேவையில்லை இது நேரம் நாங்கள் மாண்டிருந்தால் எந்த குழந்தைகளுக்கு பால் கொடுப்பீர்கள்,

புலி:—குழந்தைகளே! உங்களுக்கு நேர்ந்த ஆபத்தென்ன?

குழந்தைகள்:—நாங்கள் குகையருகில் விளையாடிக் கொண்டிருந்தோம் ஒரு சிங்கம் எங்களைப் பிடிக்க ஓடிவந்தது அதை கண்ணுற்ற ஒருபுண்ணியவான் கணையை யேவி சிங்கத்தைப் பறந்தோடச் செய்து எங்களுயிரைக் காப்பாற்றியவர்க்கு தங்களால் இயன்ற உதவி செய்வதாக எங்களிடத்தில் சத்தியஞ் செய்தால் பிறகுபால் குடிக்கிறோம்.

புலி:—உங்களை காப்பாற்றிய புண்ணியபுருஷன் எதைக்கேட்பினும் தருகிறேன் இதுவே சத்தியம் அவரை அழையுங்கள்.

குட்டிகள்;—ஐயா புண்ணியவானே வாருங்கள்.

(மணிகண்டன் வந்து நிற்கிறான்)

புலி:—ஐயா: தருமசீலரே! என் குழந்தைகளைக் காப்பாற்றிய தங்களுக்கு கோடிகோடி நமஸ்காரம் தாங்கள் எந்தவூர் தங்கள் பெயரென்ன. எதை விரும்பி இங்கு வந்தீர்கள்.

மணிகண்டன்:—புலியே: நான் வசிப்பது பந்தலகாடு என்பெயர் மணிகண்டன் என் தாயின் கொடிய வியாதியைப் போக்க உன்னுடைய பால்தேவை. அதைக்கோரியே இங்கு வந்தேன்.

புலி;—பால்தானே! தடையில்லாமல் தருகிறேன் தாங்கள் இங்கிருந்து நடந்துப் போகவேண்டாம் என் முதுகில் ஏறிக்கொள்ளுங்கள் தங்கள் அரண்மனைக்கே வந்து வேண்டிய பாலைக்கொடுத்து விட்டு மீண்டும் கானகமே வந்துவிடுகிறேன்.

மணிகண்டன்:—நல்லது! அப்படியே செய்வாயாக

(மணிகண்டன் புலிமீது அடிவைத்து யேறுகிறான் புலிரூபமாறி புருஷரூபமாறி புருஷரூபமடைகிறான்)

இந்திரன்:—என்சாபத்தின் சங்கடந்தீர்த்த சாமியே சரணம்.

மணிகண்டன்:—ஐயா! பாவியாயிருந்து புருஷரூபமான தாங்கள் யார்? நீங்கள் புலியாயிருந்த காரணமென்ன?

இந்திரன்:—சுவாமி நான் தேவேந்திரன் சில ஆண்டுகளுக்கு முன் நானே இந்திரப்பட்டம்பெற்று தேவலோகத்தை ஆளுகிறேனென்று

ஓமம் வளர்த்தி தபம் செய்தார் தூருவாசர். அத்தபத்தை நான் புலியாக வடிவெடுத்துக் கலைத்தேன். தூருவாசர் கண்விழித்துத் பார்த்து இந்திரா நீ அரிதாகிய தபத்தை புலிரூபமாகிக் கலைப் தனையோ நீ புலியாகவே போகக் கடவதென்று சபித்தார். நான் அவரை வணங்கி சுவாமி! இச்சாபம் எப்போது யாரால் எவ் விடத்தில் நீங்குமெனக் கேட்டேன். அவர் கூறியது யாதெனில் ஒரு காலத்தில் அரிக்கும் அரனுக்கும் பிறந்தவன் நீ வசிக்கும் கானகமடுத்து வருவான். அவன் பாதம் உன் மீதுப்பட்டவன் உன் சாபம் நிவர்த்தியாகுமென்றார். அவ்வாக்கு இப்போதுப் பலிதமா யிற்று சுவாமி.

மணிகண்டன்—அப்படியானால் நீர் தேவலோகத்திற்கு போகலாமே

இந்திரன்—அதுசரியல்ல சுவாமி! நான் மறுபடியும் புலிரூபமாகி றேன் எமீது ஏறிக்கொண்டு வாருங்கள் தங்கள் மகிமைப்பிரதா பம் தங்கள் நாடுமறியட்டும் என் கைங்கரியமும் முடியட்டும்பிறகு நான் புலிரூபத்தை மாற்றிவிட்டு தேவலோகம் போகிறேன்.

மணிகண்டன்:—சரி அவ்விதமே செய்வீராக.

(மணிகண்டன் புலிமீது யேறிக்கொண்டு அனேக புலிகள்சூழ அரண்மனைக்கு வருகிறான்)

மணிகண்டன் தரு

வானம்பூமி திசையெட்டுஞ்சேந் தூளெழும்பவே
வனத்தில்வாழும் புலிமீதுமணி கண்டன் வருகிறான்

கானகத்து விலங்கினத்தைப் புலிகளாக்கியே
காணும்பேர்கள் நாணவேமணி கண்டன் வருகிறான்

கதிர்மதித்தன் னொளிமழுங்க புலிமீதேறியே
காமனை நிகர்த்தமணி கண்டன் வருகிறான்

அதிகவேகமாக அன்னை அல்லல் தீர்க்கவே
அரண்மனையை நாடிமணி கண்டன் வருகிறான்

குடிமக்கள்:—ஐயையோ. ஐயையோ ஊர்நிறைந்த புலிபுலி பந்தல நாடு என்ன பாடுபடுமோ. (என்று பயந்து ஓடுகிறார்கள்)

கோகிலாவதி:—அம்மா! அம்மா! அதோ பாருங்கள் மணிகண்டன் புலிமீதிலேயே ஏறிக்கொண்டு வருகிறான்அவனோடு காட்டிலுள்ளப் புலிகளெல்லாம் வருகிறது!

குணவதி:—அப்பா மணிகண்டா! என்உடல்வலிஎப்போதே நீங்கிப் போயிற்று. இந்தப்புலிகள் யாவையும் காட்டிற்கே அனுப்பிவிடு இல்லையேல் ஊரைப் பாழாக்கிவிடும்.

மணிகண்டன்:—அப்படியேசெய்கிறேனம்மா! (புலிகளைப்பார்த்து) புலிகளே! நீங்கள் முன்னிருந்த காட்டிற்கே போய்விடுங்கள் (புலிக ளெல்லாம் காட்டைநாடிஓடுகின்றன தாய்ப்புலியாயிருந்தஇந்திரன் புலிரூபத்தைமாற்றி! சுயரூபமாய் தேவலோகம் போகிறான்)

குணவதி:—கண்ணே மணிகண்டா! என்உடல் வலியின் உபாதை தாங்காமல்உனக்கு மகாதேந்தரவைக் கொடுத்து விட்டேன்பாவம் நீபோய் அப்பாவோடிருந்து அரசாங்க விபகாரத்தைக் கவனி.

மணிகண்டன்:—அப்படியே செய்கிறேனம்மா! (மணிகண்டன் போகிறான்)

## குணவதி தரு

(காதலுண்டாகுதடி என்ற மெட்டு)

மாளவேயில்லையடி மணிகண்டன் மாளவேயில்யடி மகா
மந்திர தந்திரங் கற்றவனோ தீரமுற்றவனோ பய
மற்றவனோ யெங்கும் (மாள

நீலக்கடலேழுங் கடந்த யிடத்திலும்
நேரியாள் பாலில் கலந்த விஷத்திலும்
கோளரிகள் புலி வாழு மிடத்திலும்
கொள்ளையிலே போவானெந்த இடத்திலும் (மாள

இன்னுமோர் தந்திரஞ் சொல்லடி தாதி
இருக்கும் பொருளிலே அளிக்கிறேன் பாதி
சொன்னல் மணிகண்டன் தன்னிட மோதி
சரகவைத்து செய்வேன் நான்கரு மாதி (மாள

குணவதி: தாதி உன்சொற்படி முதலில்பாலில் விஷத்தைக்கலந்துக் கொடுத்தேன் மணிக்கண்டன் அதிலும் சாகவில்லை பிறகு உடம்பிற்கு வியாதியென்று பாசாங்குச்செய்து பாற்கடல்ஜலம் வேண்டுமென்றேன் சென்றவன் அங்கேயும் சாகவில்லை. இன்னுமென்ன செய்தால் சாகுவான் ஒரு தந்திரம் சொல்லடி தாதி.

## கோகிலாவதி தரு

சொல்வதைக் கேளுமம்மா தாதிநான்
சொல்வதைக் கேளுமம்மா உந்தன்
சோதரனுகியற் தீனதாயாளனைக் கொல்லும்படியாகச்
சொல்லியனுப்பினுல் தொல்லையற்றுப்போகும் (சொ
வல்லவனுன் தம்பி கொள்ளைக்கூட்டக்காரன்
வம்பன் வாதரடியை வெல்லுமதிசூரன்
மல்யுத்தஞ் செய்வதில் மகாக்கெட்டிக்காரன்
மணிகண்டனைக்கண்டால் மாய்ப்பானந்தவீரன் (சொ

தாதி:—அம்மா மகாராணி! இந்த மணிகண்டனை யெடுத்து வளர்ந்த போது உமது சகோதரன் தீனதயாளன் மீது பொருமையுற்று இந்த நாட்டிற்குபின்னுல் இறைவநாகுவானேயென்று யோசித்துத் தாங்கள் அவரைவிரட்டி வெளிநாடு கடத்தியது உண்மைதானே?

குணவதி:—ஆம் உண்மைதான்

தாதி:—அதே தீனதயாளன் தங்கள்மீது கோபங்கொண்டு இந்த பந்தலநாட்டைக் கொள்ளையடி யடித்துக் குணவதியின் கெர்வத்தை அடக்குவதன்றியும் குணசேகரனுக்குப் பின்னுல் பந்தலநாட்டைப்

கட்டி ஆள்பனை ஒருகை பார்க்குறேனென்று கொச்சிமலைக்கொள்ளை கூட்டத்திற்குத் தலைவனாக தீன்சாயபு யெனும் பேர் முழங்கவும் அவரைக் காண்பவர்களெல்லாம் கைகட்டி வணங்கவும் மகாவீரப் பிரதாபனாக இருந்து வருகிறார். அவரை என் நம்பியென்று சொல் லாமல் யாரோ கொள்ளைக் கூட்டத்தலைவனும் கொச்சிமலையில் வாழ்பவனும் அவன் பேர் தீன்சாயபாம் அவன் கூட்டணியோடு வந்து நமது நாட்டைக்கொள்ளையடிப்பதாகக் கூறியிருக்கிறானும்! அவன் நமது நாட்டிற்கு வாராமுன் அவன் வாழும் கொச்சிமலைக் குச் சென்று அவனையும் அவன் கூட்டத்தாரையுங் கொன்று வருவாய் மணிகண்டாயென்று அனுப்பி வைத்தால் தீன்சாயபு கையால் மணிகண்டன் மாண்டுவிடுவான் நீ மகராசிநான் ஏன் எப்படியென் யோசனை.

குணவதி:- ஆஹா! அருமையான யோசனை அப்படியே செய்கிறேன் தாதி!

## குணவதி கவி

சங்கரா ஹரா இந்த சதிக்கென் செய்வேன்
போங்கிருந்துவராற்ற பூவை யென்னுய்வேன்

சுருள்) பூதநாதனே வேதநாயகா
மாதுனனுந்தன் பாதமே கதி (சங்

கள்ளக்கூட்டணி நாட்டின் உள் புகுந்துமே
கொள்ளையடிப்பதாய் தர உள்ளம் நோகுதே

சுருள்) கோரியவரிடம் நேரிற்சென்றுமே
போரில் வென்றிட யாருமில்லையே (சங்

ஒப்பிலா மன்னர் ஒருமிக்க படையுடன்
கப்பம் வாங்கிட சென்றோர் எப்போ வருவாரோ

சுருள்) கலங்குதே மதி உலையில் மெருகுபோல்
நலங்குளைந்துநா னுய விதியிதோ (சங்

## மணிகண்டன் தரு

அம்மணி தாயே அழுவதேன் நீயே
யானல் துன்பமுனக்கு என் தாயே

சுருள்) அந்த சேதியை மைந்தனறிந்திட
விந்தையாயுரைப்பீர் தொந்தரவகற்றுவேன் (அம்

## குணவதி தரு

கொச்சிமாமலையாம் கூட்டணிப்படைகள்
கோரிகம் நாட்டில் வந்து என் மகனே

சுருள்) கொள்ளையடிப்பதாய் சொல்லியசேதி
மெல்லியாளறிந்தேன் னுள்ளம் நோகுதே (கொச்

சிவகண்டன் தரு

கொள்ளைக் கூட்டணிகள் வல்லுயிர் வாங்கித்
தொன்று வாரோம் விடைப் கொடுப்மாயம்மா
சுருள்] குண்ணுதே மனம் அண்ணனும் நானும்
வண்ணப்போர்செய்து வாட்டி வருகிறோம் [கொள்

தமையந்தி தரு

சின்னவன் நீயே உன்னிதபோரில்
சென்றமர்ப் புரிவாயே சிவகண்டனே
சுருள்] செல்லலாகாது சொல்வதைக்கேளு
வல்லவண்ணன் எல்லாமுமுடிப்பான் [சின்

மணிகண்டன் தரு

தாய்மொழி தன்னை தட்டாதே தம்பி
தாயோடரண்மனையில் தானிருப்பாய்
சுருள்] தாட்டிகமாய்நான் கூட்டணிக் கள்ளரை
வாட்டிஜெயக்கொடி நாட்டியே வருவேன் [தா

சிவகண்டன்-தனி கவி

அன்னையின் எண்ணமெல்லாம் ஆண்டவன் சாட்சியாக
என்னமோ யேதோ அண்ணு எனக்கொன்றுந்தெரியவில்லை
உன்னை நான் தெய்வமென்று உறுதியாய் நினைத்திருக்கும்
என்மீதுக்கோபம்வேண்டாம் ஏகியே வருவீரண்ணு.

மணிகண்டன்:—தம்பி! தயங்காதே, நான் சென்று வருகிறேன்

மணிகண்டன்-தரு

குனிசிலை வாளேந்தி தனியாக மணிகண்டன்
கொச்சி மலையைநாடி நடந்தேனே-ஒரு
அச்சமின்றி நகர்விட்டுக் கடந்தேனே
திருடர்க்குத் தலைவனும் தீன்சாயபு யென்ற
தீரன்திருந்தமொழி சொல்வேனே எந்தன்
பேரையென்றும் புகழ விள்வேனே

பொது வசனம்

இவ்விதமாக மணிகண்டன் கொச்சிமலையைநாடி வருகிறபோது அக்கொச்சி மலையில் வாசமாகிய கொள்ளைக்கூட்டணித் தலைவன் தீன் சாயபு வருகிற விதங் காண்க.

தீன்சாயபு வருகிற கவி

கொச்சிமலை வாசனடா கொள்ளைக்கூட்டத் தலைவனடா
அச்சமென்ப தறியாத ஆண்மைமிக்க வீரனடா
உச்சிதமாய் பேர்புவியில் உலாவுந் தீன் சாய்படா
கச்சிதமாய் கன்னக்கோல் கையிற்கொண்டு வாரேனடா

தீன்சாயபு வருகிற-தரு

பாருலகந் தனில் தீரவீர மிக்க
பலவான் நானடா. கொள்ளைக்கூட்டத்

தலைவன் நானடா- கொள்ளிமா
மலையில் தானடா- நான்
மறைவா யிருந்துப் பொருளைப்பறிக்குந்
திறவான் நானடா- இரவில்
வருவேன் தானடா
உன்னி மான தோர் கன்னக் கோலைக்கொண்டு
உடைப்பேனே பூட்டை-தவறினால்
இடிப்பேனே வீட்டை-பெட்டியிலே
எடுப்பேனே நோட்டை- வேறு
அன்னியர்கள் சொந்தக் காரர்களறிந்தால்
அடுப்பேனே காட்டை-தேடிவந்தால்
கொடுப்பேனே சாட்டை

மானிலத்தோரை மயக்கிமாயா ஜால
மந்திரக் காரனடா-அப்பாவெகு
தந்திரக் காரனடாநாட்டைசுற்றி
வந்திடும் வீரனடா-தாசன்

ஸ்ரீனிவாசன் தமிழ் தேனுக்கொப்பாமென்று
சிந்திக்குந் தீரனடா-அதைநான்
வந்திக்குஞ் சூரனடா

தீன்சாயபு கவி

ஒப்பிலா ஒற்றைக்கொம்பா உமையவன் சுதனே போற்றி
அப்பனே ஆஞ்சநேயா அரிராமதூதா போற்றி
அப்புவிதனிலே யெங்கும் ஏகினான் தேட்டைப்போட
எப்போதும் எந்தனோடு இழிந்தருள் புரிகுவீரே

மணிகண்டன்-தரு

இதுதானோ கொள்ளிமலைக் காடு இங்கு
இருக்குமோ கொள்ளை கூட்டணிவாழும் வீடு
தானிருப்பாரென்று ஆனந்தங் கொண்டேன் (இது

தீன்சாயபு கவி

ஆரடாபயலேயிந்த அடவியில் தனியாய்வந்த
தாரடா சொல்லுசொல்லு அகம்பிடித்தவனே பேரூர்
கூறடா இல்லையாகிற் கொல்லுவேன் மந்திரத்தால்
பாரடா யேவல்தன்னால் பதைபதைத்து சாகுவாயே

மணிகண்டன் கவி

சாகத்தான் போறோமிந்த சகத்தினில சிலநாள் வாழ்ந்துப்
போகத்தான் போறோம் கூற்றன் பிடிக்கத்தான் போறான் நம்
ஆகட்டுமுந்தன்வேலை அதைக்கொஞ்சம்பார்க்கவேண்டும் [மை
வேகமாய் ஜெபித்து யேவல் விடுவிடு அறியததானே

மணிகண்டன்:—ஐயா! உன் மாயா தந்திரமந்திர வித்தைகளை [நேரில்
நான் கொஞ்சம் பார்க்கவேண்டும் உன்னாலானதைச் செய்
தீன் சாயபு:—அப்படியா! இதோபார், நீயடையும் பாட்டை

தீன்சாயபு தரு

ஓம் பயிரவா ஓங்கார பயிரவா உதிரக்காட்டேரியே வாவா
பாம்பணியும் பரனே அரனே பலிபத்திரக்காளியே வாவா
சத்ருசம்மாரா வீரா சஞ்சீவிராயா வாவா
சித்திக்கணபதியும் வேலனும் சிவசங்கரியோடெதிர் வாவா
அஞ்சாமல் யானைமீதேறி அரிகர புத்திரனே வாவா
வஞ்சகரை வாட்டி வனதக்கும் மலையாள பகவதி வாவா

தீன்சாயபு மந்திரஞ் ஜெபித்தல்

ஓம் பயிரவா! ஓங்காரப்பயிரவா! ஆதிபயிரவா! சொர்ண பயிரவா ஆதி ஆதிபதினாறு கோணமும் கட்டிவா! பில்லி சூனியக்காரரையும் பல்லைப்பிடுங்கி முருக்கித்திருப்பி என்முன்னே கொண்டுவா! ஹரி ஓம் சீக்கிரம் சீககிரம் வகவக: சமசம வன வன வருக! வருக! சுதான வாகனப்பிரபு: தண்டு தண்டாயுத ஆதி உக்ரவா! காலபயிரவா ஏமபைரவா! சாமபைரவா! யேகு யேகு நம் சத்ருக்களை நோக்கியேகு கட்டிப்பிடித்துக் கொண்டு வா! (குலமந்திரம்) ஹரி ஓம்தி ஓம்நம்புரு நம்புரு அகோரம் அகோரம் உயிர் பிரணுயா! உன்னு உன்னு அடுகு அடுகு அகோர தரிசா ஐயும் கிலியும் சவ்வும் கிலியும் ஆகுருஷ்ணுயா நமஹா'

மணிகண்டன்:—ஐயா தீன் சாயபு! நான்உனக்கு தீங்கு செய்ய வந்திருந்தால்உன்மந்திரம் எனக்குப்பலிக்கும்உனக்கு நல்லதை சொல்ல வந்திருக்கிறேன் அம்மந்திரம் என்னை அணுகுமா?
தீன்சாயபு:—அதென்னடா நல்லது சொல் பார்ப்போம்
மணிகண்டன்:—சொல்கிறேன் கவனமாகக் கேட்பாயாக

மணிகண்டன் தரு

வாழ்வை நம்பாதே என்ற மெட்டு)

பல்லவி

திருடச்செய்யாதே இனிமேல் திருடச்செய்யாதே

அநுபல்லவி

திருடினால் வரும் தீது தீரா
தேறுமார்க்க மேதுயேது

(திரு

### சரணங்கள்

நல்ல வழிதனை நாடு எந்த
நானுந் தேவனைக்கொண் டாடு பொய்
பொல்லாங்கற விட்டுப் போகு மோக்ஷம்
போகும் பாதையை நீ தேடு அண்ணே (திரு

தேவன் நம்முடனே இருப்பான் நாம்
செய்பிழையாவையும் பொறுப்பான் தீய
பாவங்களைக்கரு வறுப்பான் பொல்லா
பாவிகளைக்கண்டு வெறுப்பான் அண்ணே (திரு

ஈசனருட்பிர சாதம் அது
தாசன் ஸ்ரீனிவாசன் கீதம் ஞானந்
தன்னை யுண்டாக்குமெய் வேதம் அண்ணே (திரு

### தீன்சாயபு கவி

மூடனுயிருந்தயென்னை முன்னேற்ற மடைவதற்கு
தேடியே வந்தெனக்குத் திருவருள் புரிந்த ஐயா
நாடது வேண்டேன் மற்றும் நற்செல்வம் வேண்டேனுந்தன்
கூடவேயிருக்க அன்புக் கூறுவீர் கூறுவீரே

மணிகண்டன்:—நல்லது! ஞானம்பெற்றல் நீயாரென்பதை அறிய விரும்புகிறேன் தெளிவாக தெரிவிப்பாயாக?

தீன்சாயபு:—தெரிவிக்கிறேன் சுவாமி! நான்பந்தலநாட்டை ஆளக் கூடிய குணசேகரன் மனைவியான குணவதியின் தம்பி என்பெயர் தீனதயாளன் எனக்கு அன்பும் ஆதரவுங்கொடுத்து வளர்த்து வந்தாள் என் தமக்கை ஓர்நாள் மன்னன் வெட்டையாடச் சென்ற போது அக்காட்டிலே திக்கற்றுக்கிடந்த ஒருகுழந்தையை கொண்டு வந்து அதற்கு மணிகண்டன் என்னும் பெயரை வைத்து வெகு அருமையாக வளர்த்து வருகிறபோது என் மீதுற்ற பாசமெலாம் வெறுத்து என்னை நாடு கடக்கும்படிச் செய்தாள் நான் அவள்மேல் கோபித்து கொண்டு என்றைக்கிருந்தாலும் உன்நாட்டைக் கொள்ளையடித்து பழாக்குவதன்றியும் உன்னையும் நீ வளர்த்து வருகிற மணிகண்டனையும் ஒரு கை பார்க்கிறேனென்று வந்து என் பெயரை தீன்சாயபு என்று வழங்கும் படியாகமாற்றி இந்த கொச்சிமலையிலுள்ள கொள்ளைக்கூட்டத்திற்குத் தலைவனாக இருந்து வருகிறேன் தாங்கள் யார் சுவாமி!

மணிகண்டன்:—நானேதான் மணிகண்டன். எனக்குப் பிறகு சில ஆண்டு கழித்து உன் தமக்கையான குணவதிக்கு ஒரு குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு சிவகண்டனென்னும்பெயரை வைத்து நேர்த்தியாக வளர்ந்து வருகிற நாளில் அவள் குழந்தைமேல் விருப்பமாகவும் என்மேல் வெறுப்பாகவும் இருந்து வருகிறபோது என் உயிரைப்போக்க வேண்டி சூது மார்க்கங்கள் ஏதேதோ செய் தாள் அதிலும் வெற்றியடைந்தேன். முடிவில் அவனுக் குப்பகை வனான உன்னிடத்தில் அனுப்பி வைத்தாள் அப்பனும் என்னை இன்னாரென்று அறியாத அறிவிலி பின்னால் அறிவாள், வா நாமி வரும் பந்தலநாட்டிற்குச் செல்வோம்.

தீனதயாளம்:—அப்படியே வருகிறேன் சுவாமி (இருவரும்போகி ருர்கள்).

குணவதி தரு

கொச்சிமாமலைக்குசென்ற அச்சமில்லா மணிகண்டன்
கோதையரே மாண்டிருப்பானோ-இல்லையேலந்தக்
கொள்ளைக் கூட்டத் தேரடிருப்பானோ

தாதி-தரு

கொள்ளைக் கூட்டத்தார்கள்கையால் உள்ளபடிமாண்டிருப்பான்
குறையில்லை உனக்கினி மேலே-உனதுபாலன்
இறைவனுருவான்புவி மேலே

மணிகண்டன்-தரு

அன்பனே தீனதயாளா அரண்மனைநாடியேவந்தோம்
அருமையன்னை பெருமையைப்பாராய்-உனதேடுபின்னல்
வருகிறேன் நீ செல்லுவாய் நேராய்

தீனதயாளன்-தரு

வஞ்சகி வாழுமிடத்தில் வந்ததேயென் மேலேகுற்றம்
வல்லவா நீ சென்று வாருமே-நான்வந்ததாக
மெல்லியாளிடத்திலே கூறுமே

தாதி:-அம்மா! அதோ மணிகண்டன் வருகிருன் அவனேடு
உன்தம்பி தீனதயாளனும்வருகிருர்?

குணவதி:-ஐயையோ!வந்ததடிமோசம்.இதற்கென்ன செய்யலாம்

தாதி:-எனக்கொன்றுமே சொல்லத் தோன்றவில்லை.

மணிகண்டன்.-அம்மா! நமஸ்காரம். அதோ உனதுத்தம்பி தீன தயாளரையும் அழைத்து வந்திருக்கிறேன்.

குணவதி:-கண்ணே மணிகண்டா! அவன்இந்தநாட்டில் அரைமணி. நேரம் இருக்கப்படாது, அவனிருந்த இடத்திற்கே போகச் சொல்லிவிடு. அவன் பொல்லாதவன்.

மணிகண்டன்:-அப்படியேச் செய்கிறேன் (போகிருன்)

தீனதயாளன்:-சுவாமி! என்ன சொன்னுள், என்தமக்கை.

மணிகண்டன்:-அதையேன்கேட்கிருய் நீ இந்தநாட்டில் அரைமணி நேரங்கூட இருக்கப்படாநாம் முன்னிருந்தகொச்சி மலைக்கே உன்னை அனுப்பிவிடும்படி சொன்னுள்.

நான் அப்படியேச் செய்கிறேனென்றேன், எப்படிஅவள் யோசனை

தீனதயாளன்:-ஆஹா! இப்போதே அவளைத்தவிடுபொடியாக்கி விடுவேன் உன்கருணைமொழி என்னைத் தடுக்கிறது. தப்பித்துக் கொண்டாள் பாதகி, போகட்டும் இனி தங்களின் உத்தரவுபடி நடக்க சித்தம் சுவாமி!

மணிகண்டன்:-நான் தங்கப் போகும் சபரிமலை அடிவாரத்தில் நீ முன்னதாகவே சென்றிருப்பாய். எனக்கு இந்நாட்டில் இன்னுங் கொஞ்சம் ஜோலி இருக்கிறது அதை முடித்துக்கொண்டு உடனடியாக வருகிறேன்.

தீனதயாளன்:—தன்யனானேன் சென்று வருகிறேன் சுவாமி!

(எல்லோரும் போகிறார்கள்)

அரசன் தர்பார்

குடி மக்கள்:—மகாராஜா: அபயம்! அபயம்! அபயம்
குணசேகரன்:—குடிமக்களே! உங்களுக்கு நேர்ந்த குறையாது?

குடிமக்கள்:—மகாராஜா! காட்டுமிருகங்கள் பயிர்களை அழிப்பதன்றியும் நாட்டிலே புகுந்து ஆடுமாடுகளைக் கொள்ளையிடுகிறது மன்னா

குணசேகரன்:-சரி கவனிக்கின்றேன் சென்றுவாருங்கள் குடிமக்கள் போகிறார்கள்) (அரசன் சேனாதிபதியை நோக்கி) சேனாதிபதி! இன்றுகாட்டிற்குவேட்டையாடப்போகவேண்டும்ஆயுதங்களுடனே சேனைகளை தயார் செய்.

மணிகண்டன்:—அப்பா! வீமன் விஜயனைப்போல் பிள்ளைகள் நாங்களிருக்க இந்தவயதான காலத்தில் நாங்களேன் வேட்டைக்குப் போகவேண்டும் அரங்கத்தைக் கவனித்துக்கொள்ளுங்கள் நானும் தம்பி சிவகண்டனும் வேட்டையாடி வருகிறோம்.

மணிகண்டன்:—தம்பி சிவகண்டா! நாமிருவரும் இன்று வேட்டையாடி வரவேண்டும், ஆயுதங்களுடன் புறப்படு.

சிவகண்டன்:—தன்யனானேன், இன்றுதான் தங்களுடன் என்னை அழைத்துப்போக மனம்வந்தது போலும்: சரி புறப்படுங்களண்ணா!

மணிகண்டன் தரு

ஆசைத்தம்பி ஓடி வாராய் இதோ
அடவிக்கு வந்தோமே நேராய்
கூசாமலே கையில் குனிசிலை யெடுயெடு
குதித்தோடும் புலிமீது குறியாகக்கணை விடு

சிவகண்டன் தரு

சீறிவரும் புலி சிங்கம் அதை
சிவகண்டன் புரிகுவேன் பங்கம்
மாரிபோல் கணையெய்து மதயானையைக் கொன்றேன்
மலை வேங்கை நாய்நரி மாளும்படி வென்றேன்

மணிகண்டன் தரு

அடவிக்கு வடதிசைச் சென்று தம்பி
ஆங்குள்ள மிருகத்தை வென்று
இடமுடன் வாராய் நான் தென்றிசைக்குச் சென்று
தீரமாய் விலங்கோடு போராடுவே னின்று

சிவகண்டன் தரு

வருகிறேன் வடதிசை நோக்கி அங்கு
வாழுமிருக உயிர் போக்கி
அருமை அண்ணாவுந்தன் அருள் வாக்குபடி நானே
ஆயுள் பரியந்தம் அடங்கி நடப்பேனே

[இருவரும் பிரிந்து போகிறார்கள்]

மணிகண்டன்:—[பாசாங்காக] ஹா! தம்பி! உயிர்போகுதே என்ன செய்வேன்]

சிவகண்டன்:—ஐயோ! அண்ணன் குரல் கேட்கிறதே [என்று ஓடி வருகிறான்]

மணிகண்டன் தரு கானகத்தில் எ மெட்டு

ஐயையோ யென்னுயிர் போகுதே ஆக்கையுமிக நோகுதே
வையகத்திலினிக் கொடுமை வந்ததென்றுளம் வேகுதே
அதிகமாக நோய்மீறுதே அப்பப்பாமெய்யும் சோருதே
பதறுதேயென் திரேகமெல்லாம் பரமனேமன மாறுதே
அன்னைபிதா அருமை தம்பி அனைவரையுங் காண்பதெப்போ
என்ன செய்வேன் ஈசா யென்னை எமனழைக்குறானிப்போ

சிவகண்டன்:—அண்ணா! அண்ணா! என்ன உடம்பிற்கு

மணிகண்டன்;-ஹா! தம்பி வந்து விட்டாயா ஏதோமயக்கமேலிட்டு மாரை அடைக்கிறது கைகால் சோருகிறது சற்று நேரத்தில் உயிர் போகும் போல் தெரிகிறது. நீவேகமாக அரண்மனைக்குச் சென்று என்னை அடக்கம் செய்து விடு ஹா! உயிர் போகிறதே

சிவகண்டன்:—ஐயோ! அண்ணா! மாண்டு விட்டாயா என்று

[அரண்மனைக்கு ஓடுகிறான்]

சிவகண்டன்!—ஐயையோ! அம்மா! அப்பா! அண்ணன் மாண்டு விட்டாரே.

குணவிதி—ஒழிந்ததா சனியன் அதற்கேனடா இப்படி பதறுகிறாய் நீயிந்த நாட்டை ஆளவும் மணிகண்டன் மாளவும் எவ்வளவு பிர யாசை எடுத்தேனென்பது உனக்குத்தெரியுமா? போகட்டும்போடா

சிவகண்டன் தரு

அடிபோடி சண்டாளி என்ற மெட்டு

கன்னிகள்

நாயே நீயொரு தாயா இந்த
நாட்டுக்கு ராணியா ளுயா

பேயே நீயொருப் பெண்ணாகப் பிறந்து
பிரியமுள்ளயென தண்ணனை மறந்த (நாயே
அறிவிலி உன்னாலேத் தாண்டி என
கண்ணன் உயிரைவிட் டாண்டி

மறலியேறி வரு மதிகெட்ட மாடோ
மங்கைமூதேவி மாதுனக்கிடோ (நாயே

குணவதி:— கண்மணி! நான் உனக்கு நல்லது செய்வித்தால் என்னை இப்படியாக வார்த்தையாடலாமோ? இது ஞாபகந்தானு உனக்கு?

சிவகண்டன்:—அடிபாவி! குலஹீனி! என் தமையன் தன் உயிரையே வெறுத்து உனக்கு எவ்வளவோ ஏவல் புரிந்தாரே? அத்தகையோரே இப்படியும் வெறுக்கலாமா? உன்மீதுத்தவறில்லை நீ அவர் மகிமையைஅறியாதவள், நாங்கள்பாடசாலையில் வாசிக்கும்போது அங்குள்ள பிறவிக்குருடனுக்கு கண்தெரிய வைத்தார். ஊமையைப் பேசும்படி செய்தார். பெருநோயை நீக்கினுர் அதுமட்டுமா? உனக்கு பாற்கடல் நீர் கொண்டு வந்தார்! புலிப்பால்கொணர்ந்தார். இவையெல்லாம் ஒரு சாதாரண மனிதனுல் செய்யமுடியுமா? அவர் மாபெருந் தெய்வமடி

குணவதி:—அப்பா; என்னைத்திட்டாதே. எனக்கு ஞானம் பிறந்தது ஐயோ அப்பா! ஐயோ அப்பா! ஐயோ அப்பா! என்று தாய்தந்தை சகோதரன் குடிமக்கள் யாவரும் கூவிக்கொண்டே காட்டிற்கு ஒடுகிருர்கள்.

மணிகண்டன்:—[எழுந்து நின்று] அன்புடைய குடிமக்களே! அருமைத் தாய்தந்தையரே! நீங்கள் யாவரும் என்அருகில் வரப்படாது என்னைத்தொடவும்படாது. மராமரம் என்றமொழியிலிருந்துஎப்படி ராமாயென்று ஒலி எழும்பிற்ரோ அதுபோல் நீங்கள் யாவரும் ஐயோ அப்பா! ஐயோ அப்பா! என்று கூறிவந்த மொலியானது ஐயப்பனுக மாறியது ஆகையால் நான் ஐயப்பன் ஐயப்பனுகவே இனி உலக மக்கள் சரணம் சரணம் ஐயப்பா. சாமியே சரணம் ஐயப்பா என்றுத் துதித்து வணங்கும்படியாகவும் அவர்களுக்கு

நான் திருவருள் புரியும் படியாகவும் தருக்கன் சூழ்ந்த சபரிமலைக்குப் போகிறேன். என்னை தரிசிக்க விரும்பும் அன்பர்கள் காவி வஸ்திரமணிந்து ஞானம் கருணை சத்தியம், பக்தி, தவம், தியானம், பரிசுத்த நற்குணங்களுடன் நாற்பத்தி எட்டுநாள் விரதமிருந்து நானிருக்கும் இதர ஸ்தானத்தை நாடி வந்தால் யாதொரு தீங்கும் நேராமல் தரிசிக்கலாம். இதுவே நான் கடைசியாக உரைத்துப் போகும் நற்செய்தி வருகிறேன்.

[எல்லோரும் ஐயப்பனை துதித்துபாடுதல்]

சரணம் சரணம் ஐயப்பா எங்கள்
சாமியே சரணம் ஐயப்பா
கருணை கரனே ஐயப்பா எங்கள்
கண்ணே மணியே ஐயப்பா
ஆவியே அமுதே ஐயப்பா எங்கள்
ஆண்டவா சரணம் ஐயப்பா
தீவினை தீர்ப்பாய் ஐயப்பா மஹா
தேவ தேவனே ஐயப்பா
மகர ஜோதியே ஐயப்பா சபரி
மலையாண்டவனே ஐயப்பா
சதமுழு நாளும் ஐயப்பா கோடி
சரணம் சரணம் ஐயப்பா

ஐயப்பன் தரு

ஐயப்பசுவாமி எழுந்தார் சபரிமலைக்கு [இய
ஐவ்யத்து மானிடர்கள் வணங்கியெனைக் கொண்டாட
வரிசையா யந்தணர்நின்று வாழ்த்தியே தங்கள்பாட [ஐய

கருணை வடிவம் பூண்டவர் அடியவர்களைக்
கார்த்து ரட்சிக்கும் ஆண்டவர்

அருணோதயப் பிரகாசன் அடியாருள்ளத்தில் வாசன்
அசுரவர்க்க மதனை அனர்த்தமாக்கியே நாசன் (ஐய

பாபசம்மார வீரனும் பரிமீதேறி
புவனி வந்திருந் தீரனும்

ஆபத்பாந்த நாயகா அனாத ரக்ஷகாவென்று
அண்டர் மண்டலமுள்ள தொண்டர் துதிக்க இன்று (ஐய

பூசும் வெண்ணீறிலங்கவே ருத்ராக்ஷமாலை
பூணூல் மார்பில் துலங்கவே
தாசன் சிறுவன் ஸ்ரீனி வாசன் தமிழ்க்காதாரன்
தாய்தந்தை தம்பதிகள் தன்னை வெறுத்த வீரன் (ஐய

பொது-வசனம்

நேயன்பீர்!

ஸ்ரீ மகரஜோதி ஐயப்பசுவாமியவர்கள் தாய், தந்தை தம்பதிகளை வெறுத்து பிரம்மச்சாரி வேடம்புனைந்து காவிவஸ்திரம் ஜெப மாலை தண்டு கமண்டலத்தோடு அன்பர்களுக்கு அருள்பாலிக்கும் மெய்த் தெய்வமாய்ச் சபரிமலை கொலுபீடத்தில் அமர்ந்தருளினார் என்பதோடு இந்நாடகம் முற்றுப்பெற்றது. இந்நாடகக் கதையை உரைத்தவரும் சுற்றமும். இதை உலகமக்கள் அறியும்படி எழுதியவரும் சுற்றமும் இதை அச்சிட்டு வெளிப்படுத்தியவரும் சுற்றமும் இந்நாடகந்தைப் படித்து நடிப்பவரும், பார்ப்பவரும் கேட்பவரும் ஸ்ரீசபரிமலை ஐயப்ப மகரஜோதி அருளினால் பாபத்தை விலக்கி இகபர சுகந்தைப் பெற்று நீடுழி வாழ்வாராகுக என்பது!

வாழி விருத்தம்

ஐயப்பசுவாமி வாழ்க! அவரடியார்கள் வாழ்க!
மெய்யன்பும் பண்பும்வாழ்க! மெய்த்தவ ஞானம்வாழ்க!
வையத்து மாந்தர் வாழ்க! வளர்கலை செல்வம் வாழ்க!
ஐயமிட்டுண்போர் வாழ்க! அரியநூல் வாழ்க! வாழ்கவே! !
சரணம் ஐயப்பா! சரணம் ஐயப்பா!

மாற்றுந்தாய் கொடுமை என்னும்

ஸ்ரீசபரிமலை மகரஜோதி

ஐயப்பஸ்வாமி திருவிளையாடல் நாடகம் முற்றிற்று.

சுபம்! சுபம்!! சுபம்!!!

---

எமது புதிய நாடகம் விற்பனையாகின்றது.

# கல்விக்கழகன் விழிதூரன்

## சண்டை நாடகம்

---

சீனிவாச அச்சகம், சூளை, சென்னை-600007.